பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 16 சனிக்கிழமை (28-02-2004) தொலைபேசி - 2223378 ஒலி 71

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# 'வீடு' சின்னத்தில் போட்டியிட முன் கட்சிச் செயலர் என்னுடன் கலந்தாலோசிக்கவில்லை

## ஆவரங்கால் சின்னத்துரை பி.பி.சிக்குப் பேட்டி

(லண்டன்)

**தமிழரசுக் கட்சியின் தலைவராக நான் இருக்கும் போது என்னுடன் எந்தவிதமான ஆலோசனைகளையும் மேற்கொள்ளாமல் செயலாளர் மாவை சேனாதிராஜா தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தைப் பாவித்தமை பிழையானது எனக் கருதியே நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்தேன். இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான ஆவரங்கால் சின்னத்துரை லண்டன் பி.பி.சி.தமிழோசைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து அக் கட்சியின் தலைவர் ஆவரங்கால் சின்னத்துரையை லண்டனில் வைத்து பி.பி.சி. பேட்டி கண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது;

இலங்கை தமிழரசுக் கட்சி தற்போது இயங்கா விட்டாலும் தேர்தல் திணைக்களத்தில் கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியை மற்றவர்கள் தேர்தலுக்கு பாவிக்கக் கூடாது என்ற காரணத்தினாலும் கட்சியின் பதிவு முக்கியமானவர்களின் கையில் இருக்க வேண்டும் என்று அமரர் அமிர்தலிங்கம் கூறியதற்கிணங்கவும், அவருக்குப் பின்னர் மூதூர் அ.தங்கத்துரை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவருடைய மறைவுக்குப் பின் நான் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு

(12ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வன் - ஹெவ்டே கிளிநொச்சியில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்பியூறு ஹெவ்டேயிற்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இன்று இடம் பெறவுள்ளது.

இன்று முற்பகல் 11.00மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இச் சந்திப்பின் போது தற்போது அமுலில் இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் யுத்த நிறுத்த சூழ்நிலையையும் தொடர்ந்தும் பேணுவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்படும் என கண்காணிப்புக் குழுவின் ஊடகப் பேசசாளர் தெரிவித்தார்.

(12ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கான உதவிகளை சர்வதேசம் தொடர வேண்டும்

## ஐ.நா.செயலாளர் அனான் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்படும் உதவிகளை இடைவிடாது தொடருமாறு, சர்வதேச நாடுகளிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளை துரிதமாக ஆரம்பிக்க முடியும் எனவும் அனான் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும்தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சமாதான நடவடிக்கைகளுக்காக நோர்வே அரசாங்கம் இதுவரை ஆற்றியுள்ள பயன்மிக்க நடவடிக்கைகள் தொடர்பாக பாராட்டுக்களையும், நன்றிகளையும் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல நோர்வே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்த அவர், இந்நிலை தொடர்பாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சேவையையும் பாராட்டியுள்ளார். (இ)

# கன்டர் தடம்புரண்டதில் இருவர் பலி, 12பேர் காயம்

## கிளிநொச்சியில் சம்பவம்

(தனங்கிளப்பு)

எல்வ் ரக கன்டர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த இருவர் பரிதாபகரமாக மரணமாகினர். 12பேர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி இரணமடுச் சந்திக்கும் திருமுறிகண்டிக்கும் இடைப்

(12ம் பக்கம் பார்க்க)

# ஜனநாயக உரிமைகளை வழங்குமாறு வெளிநாடுகள் புலிகளை அழுத்தவேண்டும்

## அனுராதபுரத்தில் ஜே.வி.பி.தலைவர்

(கொழும்பு)

ஆயுதப் போரை நடத்தாமல் கொள்கைப் போரையே நடாத்த வேண்டும். பகைமை அரசியல் கைவிடப்பட வேண்டும். நெறிமுறையான அரசியல் பின்பற்றப்பட வேண்டும் என்று அனுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

சுதந்திர முன்னணியின் வெற்றி சகல சமூகங்களினதும் வெற்றியாக இருக்கும். விவசாயிகள் முதலீட்டாளர்கள், புத்திஜீவிகள், தொழில் சார் நிபுணர்கள், பாதுகாப்புத் துறையினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் புதிய கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு தாம் உறுதி பூண்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் மக்களுக்கு எந்தவொரு மதத்ததையும் பின்பற்றும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு உட்பட்ட ஜனநாயகம் சகல பகுதிகளுக்கும் மீள ஏற்படுத்த வேண்டும். வடக்குக் கிழக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குமாறு ஜனநாயக நாடுகள் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். சுதந்திரக் கூட்டணி அரசின் கீழ் ஆங்கில

(12ம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக் கழகத்தில் பகிஷ்கரிப்புப் போராட்டம்

## கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே.சிவபாலனின் வீட்டில் இனந்தெரியாதோர் கடந்த வாரம் மேற்கொண்ட அச்சுறுத்தல் நடவடிக்கையைக் கண்டித்து நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம் பெற்றது.

இதனால் பல்கலைக் கழக கல்விச் செயற்பாடுகள் முற்றாக பாதிப்படைந்திருந்தது.

மருத்துவ பீடாதிபதியின் வீட்டுக்குள் புகுந்து, இனந்தெரியா

(12ம் பக்கம் பார்க்க)



யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்

(சி-7402)

## சிறு விளம்பரம்

### தேவை

பனை அபிவிருத்திச் சபையால் தரமான புழுக்கொடியல், பச்சை ஒடியல் கிலோ ரூபா 50/= வீதமும், எரிபொருள் பாவனைக்கு தரமான விறகும் கொள்வனவு செய்யப்படுகின்றது. பனை அபிவிருத்திச் சபை, 53 கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-7269)

### நிமால் கொலை வழக்கு சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவரான திருகோணமலைச் சேர்ந்த பாலச்சந்திரன் உதயபவன் என்பவரது சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜாவால் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணைமனு மீதான விசாரணை நேற்று முன் தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சிற்றூழியர் தவிர்ந்த 4 அரசாங்க ஊழியர்களின் 1 இலட்ச ரூபா ஆட்பிணையிலும் இவ் வழக்கு தொடர்பாக நீதிவான் நீதிமன்றம் அறிவிக்கும் போ[illegible] நீதிமன்றுக்கு சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் சந்தேக நபருக்கு பிணை வழங்குமாறு நீதவான் நீதிமன்றுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி வரதராஜா உத்தரவிட்டார்.(உ-3)

### புத்தகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மாசி மகாமகத்தை முன்னிட்டு 'மாசி மகத்தின் மகிமை' என்னும் புத்தகத்தை காங்கேசன் துறை வீதியில் உள்ள மில்க்வைற் தொழிலகம் இலவசமாக வழங்கி வருகிறது.

இந்து சமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். (உ)

# விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு அடிப்படையில் பேச்சுக்கள் தொடர வேண்டும்

## ரொய்ட்டர் செய்திச் சேவை ஆய்வாளர்களிடம் பட்டப் பின்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டும். அதற்குரிய அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு கொடுக்க வேண்டும் என யாழ். பல்கலைக் கழகத்தின் பட்டப் பின்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி சி.க. சிற்றம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைவரங்கள் பற்றிய ஆய்வொன்றினை மேற்கொள்வதற்காக ரொய்ட்டர் செய்திச் சேவையின் ஆய்வாளர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் சி.க.சிற்றம்பலத்தை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்தனர். இச் சந்தர்ப்பத்தில் அரசியல், சமூக நிலைப்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் விளக்கமளிக்கையில்; கடந்த 50வருட காலமாக இலங்கைத் தமிழர்கள் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்களில் அரசினால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் கடந்த காலங்களில் மக்கள் தமது வாழ்வுரிமை கோரி போராட வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

இலங்கையின் தேசிய இனமாகவும், தனக்கென மொழி, மதம், கலை, பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட தனித்துவமான இனமாகவும் இருக்கின்ற போதும் தமிழினத்திற்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை.

இது இலங்கைக்கான சுதந்திரத்தை வழங்கிய பிரித்தானியா செய்த தவறு. இதன் காரணமாக அஹிம்சை வழியிலும், பின் ஆயுத வழியிலும் தமிழர்கள் போராடினார்கள்.

இப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஏற்காத தென்னிலங்கைத் தலைமைகள் இக் கோரிக்கைகளை தட்டிக் கழித்ததுடன் போராட்டத்தை நசுக்கவும் முற்பட்டனர். இதன் விளைவாக ஆயுதப் போராட்டம் வலுப்பெற்று உச்ச கட்டத்தை அடைந்தது.

அந்த நிலையில் தற்போதைய சமாதான நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இதில் தமிழரின் உரிமைக்காக போராடிய புலிகள், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பேச்சு மேசைக்குச் சென்றனர். பேச்சுக்கள் தொடர்ந்தம் நடைபெற்ற போதும் கடந்த கால ஏமாற்ற அனுபவங்களின் அடிப்படையிலும், நம்பகரமான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் வேண்டி விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபை முன்வைத்த நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்த பேச்சுக்கள் தடைப்பட்டுப் போயின.

இவவாறு பேச்சுக்கள்தடைப்பட்டுப் போனதால் மக்கள் மத்தியில் விரக்தியும் வெறுப்புணர்வுமே தோன்றியுள்ளது. எனவே மக்கள் கடந்த கால யுத்தத்தால் எதிர் கொண்ட இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்கள், புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ளதும், தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு அமைவானதுமான இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு அடிப்படையில் பேச்சுக்கள் தொடரப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். (உ-19)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும்

### லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர்ப்பணிப்புடன் செயற்படும் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இது குறித்து மேலும் கூறுகையில்;

அரசினால் தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகாவும் மற்றும் அவரது கட்சியினரும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார்கள்.

சமாதான முயற்சிகளை மேற்கொள்வதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விட்ட தவறுகளை சரி செய்வார்.

எதிர்வரும் தேர்தலின் போது வாக்காளர் முன் வைக்கப்பட்டிருப்பது, சந்தேகத்திற்கு இடமான சமாதான முயற்சியைத் தெரிவு செய்வதா அல்லது அனைவருடனும் கூடிய பங்களிப்புடன் கூடிய நடைமுறையை தேர்ந்தெடுப்பதா என்பதாகும் என்றார். (உ-61,8)

### இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் இசை ஆராதனையின் 5ம் நாளான இன்று சனிக்கிழமை பேபி ராம ஜெக நந்தினியின் பாட்டுக் கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் இடம் பெறவுள்ளது. (உ-18)


சங்குநாதம்

முத்தரப்புப் போட்டியில் யாழ்ப்பாண தேர்தல் களம் — விதுரன்

ஆட்சியை அமைக்கப்போவது யார்? — கோவையூர் ஜெயன்

பாரதத்தின் அடுத்த பிரதமர் வாஜ்பாயா? சோனியாவா? — டொறிங்ரன்

வாழ்வை வளப்படுத்த துரைமுருகர் எழுதும்

என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் (தொடர்கதை)

வியாசரின் பதில்கள் — ஆலடி மாநாடு

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்




வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

# ஹெயிட்டியை நெருங்கிவரும் தீவிரவாதிகள்

# தலைநகரம் எந்நேரமும் தாக்கப்படலாம்

பேதுரு யேசுதாசன்

(போட்ஸ் ஓ ஸ்பெயின்)

ஹெயிட்டியின் அரசியல் நிலைவரம் நிமிடத்திற்கு நிமிடம் பதற்றம் அடைந்துகொண்டு வருகின்றது. ஹெயிட்டிய ஜனாதிபதி அரிஸ்டைட நாட்டின் நலன்கருதிப் பதவி விலகவேண்டும் என்று பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துவிட்டது.



தலைநகரை எந்நேரமும் தாக்குதவதற்குத் தயார்நிலையில் இருக்கும் தீவிரவாதிகளைப் படத்தில் காண்கிறீர்கள்.

இதுவரை காலமும் அரிஸ்டைட்டுக்கு முண்டுகொடுத்துவந்த அமெரிக்க அரசும் எதிர்பார்த்ததைபோலவே தடாலடியாகக் கரணமடித்திருக்கிறது.

## அமெரிக்கா கரணம்

அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி மிக மோசமான பின்னடைவுகளை எதிர்நோக்குவது உண்மைதான். ஊழலும், மோசடிகளும் அவரது ஆட்சியில் நிலவுகின்றதென்பதும் உண்மைதான். தனது நாடடின நலன்கருதித் தனது நிலைப்பாட்டை அவர் மீள்பரிசீலனை செய்வது நல்லது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை, ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச் சபை ஹெயிட்டிக்கு ஒரு சர்வதேச சமாதானப் படையை அனுப்புவது குறித்து அவசரக் கூட்டம் ஒன்றைக் கூடி ஆராயந்துள்ளது. ஹெயிட்டியின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதியைத் தீவிரவாதக் கெரில்லாக்கள் கைப்பற்றியிருப்பதோடு, தலைநகர் போட்ஸ் ஓ ஸ்பெயினை நோக்கி தீவிரமாக முன்னேறி வ்ருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் ஜனாதிபதி அரிஸ்டைட் தான் ஒருபோதும் பதவி விலகப்போவதில்லை என்று மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளும் ஹெயிட்டியின் அண்டைய கரீபியன் நாடுகள் இப்பிரச்சினையில தலையிட்டுப் படைகளை அனுப்பித் தீவிரவாதிகளைத் தடுத்து நிறுத்துமாறு அவசர கோரிக்கை விடுத்துள்ள அதேவேளை, ஒரு அரசியல் தீர்வையொட்டி மாத்திரமே சர்வதேச சமாதானப் படையொன்றை ஹெயிட்டிக்கு அனுப்ப முடியும் என்றும் இந்நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, துரித கதியில் சர்வதேச சமூகம் இப்பிரச்சினையில் தலையிடாது போனால், ஹெயட்டி அரசாங்கத்தைத் தூக்கி எறிந்துவிடத் தயங்கமாட்டோம் என்று தீவிரவாதிகளுக்கு ஆதரவு தரும் பஹாமாஸ் அரசின் வெளிவிவகார அமைச்சர் பிரட்றிக் மிச்செல் அறிவித்திருக்கின்றார்.

## தீவிரவாதிகள் மறுப்பு

ஆனால் ஜனாதிபதி அரிஸ்ரைட் தனது எதிராளிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும எனும் நிலைப்பாட்டை ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் வலியுறுத்தி வருகின்றது. இம் முன்




மொழிவுக்கு ஜனாதிபதி அரிஸ்ரைட் இணங்கியபோதும், அவருடைய எதிராளிகள் இதற்குச் சம்மதிக்கவில்லை. கடந்த தேர்தலில் பல மோசடிகளைச் செய்தார், அவர் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகளையே மேற்கொள்வார். ஏனெனில் அவரது ஆட்சி ஊழல் மோசடிகளால் சீர்கெட்டுப் போயுள்ளது. ஆகவே, அவர் பதவியில் இருந்து வெயியேறவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

## தாக்குதல் அச்சுறுத்தல்

மேலும் எந்தவொரு அரசியல் வாதிகளோடும் தொடர்புகளை வைத்திருக்காத ஆயுதம் தாங்கிய கெரில்லாக்கள் தலைநகரை எந்நேரத்திலும் தாக்குவோம் என்று அச்சுறுத்தியவண்ணம் இருக்கின்றனர். நடைபெற்றுவரும் எந்தவொரு சர்வதேச மட்டத்திலான பேச்சுவார்த்தைகளிலும் இவர்கள் பங்குபற்றவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கெரில்லாத் தலைவர்களுள் ஒருவரான ஹைபிலிப்பி கருத்துத் தெரிவக்கையில் தலைநகர் போர்ட்ஸ் ஓஸ்பெயின் எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு உள்ளாகும் நாங்கள் அதற்கான ஆயத்த நிலையில் இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி அரிஸ்டை தேசிய மாளிகையை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். இல்லையேல் வெகுவிரைவாகத் தலைநகரைத் தாக்கி அவரை நாம் கைதுசெய்வோம் என்று அவருக்கு எச்சரிக்கை விடுகின்றேன் என்று கெரில்லாத் தலைவர் தெரிவித்தார்.

ஹெயிட்டியின் மூன்றாவது பெரிய நகரான கெயிஸ் நேற்று தீவிரவாதிகளின கைகளில் வீழ்ந்தது. ஹெயிட்டியின் தென்பிராந்தியத்தில் தீவிரவாகளிடம் வீழ்ந்த மிகட் பெரிய முதல் நகரம் இதுவென பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருட மாசிமாத ஆரம்பத்தில் கெரில்லாக்கள் தாக்குதலை ஆரம்பித்து ஹெயிட்டியின் வடபகுதியில் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளனர். இத்தாக்குதலில் சுமார் 70 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



தலைநகர் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் தமது உடமைகளுடன் ஹெயிட்டியைவிட்டு வெளியேறும் வெளிநாட்டவர்கள்.

## வெளிநாட்டவர் வெளியேற்றம்

வெளிநாட்டவர்கள் ஹெயிட்டியில் இருந்து அவசர அவசரமாக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பணியாளர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. விமான நிலையங்களுக்குச் செல்வது உயிராபத்து என்று கருதும் வெளிநாட்டவர்களை ஹெலிகப்டர்மூலம் அந்தந்த நாட்டுத் தூதரகங்களில் இருந்து விமான நிலையத்திற்குக் கொண்டுசெல்லும் பணிகளும் நடைபெற்றவண்ணம் உள்ளன.

மேலும், அரிஸ்டைட்டு க்கு விசுவாசமான படையினர் நகரில் வீதித்தடைகள் ஏற்படுத் திச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்கள் அவரது மாளிகையைச் சூழ நின்று அவரைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளனர். ஆனால், மாறியுள்ள உலக ஒழுங்கில் தீவிரவாதத்திற்கெதிராக அமெரிக்கா என்ன செய்யும் என்பது இங்கு எழுப்பப்படும் முக்கிய கேள்வியாகும். □

# ஜனாதிபதியும் பிரதமரும் ஒருமித்த கருத்துடன் செயற்படுகின்றனர்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவுப் பிரதிநிதி கலிம்

(கொழும்பு)

பதின்மூன்றாவது பாராளுமன்றப பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலமே இருக்கும் சூழ்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் முன்னெடுத்து வரும் தேர்தல் பிரசாரங்களின் முக்கிய சாராமசம் 'தொடர்ந்தும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு மக்கள் ஆதரவுடன் நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவது' என்பதே.

உண்மை நிலையும் இவ்வாறிருக்கையில், பிரதமர் ரணில் அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து வந்த சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குழப்பிவிட்டார். நாட்டில் அமைதி ஏற்படுவதை விரும்பாமலேயே ஜனாதிபதி சமாதான முயற்சிகளை எட்டி உதைத்து விட்டார் எனச் சில ஊடகங்கள் வெளியிட்டுவரும் செய்திகள் உண்மைக்குப்புறம்பானவை என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவை சேர்ந்த எஸ்.ஐ.எம்.கலிம் தெரிவித்துள்ளார்.

எஸ்.ஐ.எம்.கலிம் மேலும் இது தொடர்பில் கருத்து.வெளியிடுகையில்,

### உண்மைநிலை எது?

சமாதான நடைமுறைகள், அதற்கான முயற்சிகள் குறித்து பல்வேறு விடயங்கள் பலதரப் பட்டோராலும் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மைநிலை எது என்பது பற்றி நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். சமாதான முயற்சிகளை ஜனாதிபதி குழப்பிவிட்டார் என லண்டன் பி.பி.சி. செய்தி ஸ்தாபனத்தால் இரு நாட்களுக்கு முன்னர் செய்தி ஒலிபரப்பப்பட்டிருந்தது. ஆனால் அது தவறு உண்மை நிலையை விரிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இது விடயம் தொடர்பாக நாம் உண்மையான விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பிரதமர் ரணிலுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டது. ஆயினும் விடுதலைப்புலிகளுடன் இவ்வாறான உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அரசாங்கத்திற்கோ அமைச்சர்கள் உட்பட உயர் அதிகாரிகளுக்கோ அறிவிக்கப்படவில்லை. இந்தச் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை குறித்து நாட்டின ஜனாதிபதிக்குத் தெரியாது. இது பற்றிக் கேட்பதற்கு எல்லாம் முடிந்த பின்னர் ஜனாதிபதிக்கு அறிவிக்கலாம் என்று இருந்தோம் என பிரதமரின் ஊடகப் பேச்சாளர் பின்னர் கருத்து வெளியிட்டிருந்தார்.

### சமாதானத்தைத் தொடரட்டும்

நிலைமை இவ்வாறிருக்க யார் யாருக்கிடையில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதோ அவர்களே சமாதான முயற்சிகளைத தொடர்ந்தும் முன்னெடுக்கட்டும். அவர்களே சமாதானத்தைப் பேண வேண்டும். சமாதானம் முறிவடைவதற்கு ஒரு போதும் ஜனாதிபதி காரணமாக இருக்கவில்லை.

ஜனாதிபதியைக் குற்றஞ்சாட்டுபவர்கள் சமாதானம் முறிவடைவதற்கு ஜனாதிபதி எவ்வகையில் காரணமாக இருந்தார் என விளக்கமளிப்பார்களேயானால் அவர்களுக்கு உரிய பதிலை வழங்குவதற்கு எம்மால் முடியும்.

ஆயினும் கடந்த ஏப்ரல் மாதத்துடனேயே இரு தரப்புக்குமிடையிலான சமாதான முயற்சிகள் முடிவடைந்துவிட்டன. ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப் பேற்றதன் காரணமாகவே சமாதான முயற்சிகள் குழப்பமடைந்து விட்டன என ஒரு சாரார் குற்றஞ் சாட்டுகின்றனர். நவம்பர் மாதம் 4-ந் திகதிதான் ஜனாதிபதி 3 அமைச்சுக்களையும் பொறுப்பேற்றார்.

உண்மைநிலை இவ்வாறிருக்க சமாதான முயற்சிகள் ஜனாதிபதியினாலேயே முறிவடைந்தன எனக் குற்றஞ்சாட்டுவதில் எவ்வித உண்மை இருக்கின்றது என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி முழு முயற்சியுடன் ஆணித்தரமாக செயற்பட்டு வருகிறார்.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்குரிய பாதுகாப்பு அமைசசின் அதிகாரங்களை மீண்டும் பிரதமரிடம் கொடுப்பதற்கு ஜனாதிபதி முன்வந்து, அவரைப் பலமுறை இதுவிடயம் குறித்து வேண்டினார். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் முழு அதிகாரத்தையும் மீண்டும் தன்னிடம் தரவேண்டும் எனவும், இதன்போதே சமாதான முயற்சிகள தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில்தான் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்தனவே தவிர ஜனாதிபதியால் ஒரு போதும் சமாதான முயற்சிகள் தடைப்படவில்லை. இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த 1994 இல் ஜனாதிபதி சமாதான முயற்சிகளை ஆரம்பித்திருந்தார் ஆயினும் பேச்சுவார்த்தைகளின் இடைநடுவில் அதனைக் குழப்பி முறியடிததுச் செல்வது புலிகளுக்கு ஒவ்வொரு தடவையும் வழக்கமான செயற்பாடாகியிருந்தது எனக் குறிப்பிட்டார். (உ-18)

# வடபகுதி மாணவர்கள் விடயத்தில் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்கிறது

## பேராசிரியர் சண்முகதாஸ் கவலை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடப் புத்தகங்கள் இன்னமும் முழுமையாக விநியோகிக்கப்படவில்லை. இதனால் பாடசாலை மாணவாகளால் தமது கல்வியை முழுமையாகத் தொடர முடியாத நிலையே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த இரு மாதங்களுக்கு முன் கல்வித் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் இங்கு வந்திருந்த போது யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் கல்வி தொடர்பான பல பிரச்சினைகளை அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். அப்போது பல வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார்.

எனினும் இதுவரை எந்தகைய முன்னேற்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அனுப்பி வைப்பதில் கல்வி அமைச்சு இன்னமும் அசமந்தப் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது. ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னரும் கூட, பாடப் புத்தகங்களை நேர காலத்துடன் அனுப்பி வைக்கமுடியவில்லை என்பது அரசின் மாற்றாந்தாய் மனப்பாங்கை வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றது.

அத்துடன், கல்வித் துறையில் இன்று வடபகுதியில் பெரும் ஆளணித் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதை ஈடு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் எனக் குறிப்பிட்டார்.

நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவரான வணபிதா ஏ.க. பேர்னாட் அடிகள் அங்கு கருத்துரையாற்றும் போது,

யாழ்ப்பாணத்தில் நாம் மனித உரிமைகளை அனுபவிக்க முடியாதவர்களாகவே இருந்து வருகின்றோம். புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு முழுமையாக இரு வருடங்கள் பூர்த்தியடைந்து விட்ட போதிலும் கூட, இங்கு எந்த விதமான முன்னேற்றங்களோ அல்லது மாற்றங்களோ நிகழவில்லை. கல்வித் துறையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளார்கள்.

சமாதானம் ஏற்பட்டதால் முழுமையாகப் பயனடைபவர்கள் தென்பகுதி மக்கள் மட்டுமே ஆகும். வடபகுதி மக்கள் பெரிதாக எத்தகைய நன்மைகளையும் அனுபவிக்கவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்தில் 52 பாடசாலைகள் மூழ்கிப் போயுள்ளன. கல்வித்துறையில் நீண்டகாலமாக நிலவி வரும் ஆளணிப் பற்றாக்குறை எமது மாணவர்களின் கல்வியைப் பாதித்து வருகின்றது.

பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களுக்குப் போதிய உணவு இல்லாமையினால் பாடசாலை நேரங்களில் மயங்கி விழுகின்ற சம்பவங்கள் அன்றாட சம்பவங்களாகிவிட்டன என்றார்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரான சு.பரமநாதன் அங்கு குறிப்பிடும் போது,

யாழ்ப்பாணத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட போதிலும் கூட , சமாதானம் இன்று குறுக்கு வீதியிலே போய்க்கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தவர்களின் செல்வம் கல்வியாகும். ஆயினும், அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனப் போக்கின் காரணமாக இன்று கல்வி நிலை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இங்கு உண்மையான சமாதானம் நிலவவேண்டும். யாழ்ப்பாணத்தின் கல்விநிலை மேம்படவேண்டும். நீண்ட காலமாக நிலவி வரும் ஆசிரிய வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவேண்டும். எமது கல்விநிலை சீரற்று இருப்பதால் தரம் கீழ் நோக்கிப் போய் கொண்டிருக்கின்றது. இதில் நல்ல மாற்றங்களைச் செய்யவேண்டும்.

யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட பாடசாலைகள் முழுமையாகப் புனரமைக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் பௌதீக வளங்கள் முழுமையடைந்திருந்தால் தான் மாணவர்கள் தமது கல்வியில கூடிய கவனம் செலுத்த முடியும எனக் குறிப்பிட்டார். (உ-16)

**65 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி செலவில்**

## பன்னிரு கிராமங்களில் நியாப் திட்டங்கள் அமுல்

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் தற்போது 12 பொதுக் கட்டடங்கள் நிறுவப்பட்டுவருகின்றன.

65 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந் நிர்மாணப் பணிகள் கிராம அபிவிருத்திச் சங்கங்களூடாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

துன்னாலை தெற்கு, துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு, இடைக்குறிச்சி, வல்லிபுரம், நவாலி தெற்கு, இருபாலை தெற்கு, சரவணை கிழக்கு, காரைநகர் வடக்கு, புளியங்கூடல், குடத்தனை கிழக்கு, குடத்தனை மேற்கு ஆகிய 12 கிராமங்களிலும் தலா ஓவ்வொரு பொதுக் கட்டடம் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப் பணிகள் யாவும் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக நிறைவு பெறும் எனத் தெரிவிக்கப் படுகிறது.(உ-19)

## தேர்தல் கண்காணிப்பாளர்களை உள்ளூரிலும் திரட்ட விரிவான ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பைக் கண்காணிக்கும் பணியின் “பவ்ரல்” அமைப்பு நாடளாவிய ரீதியில் 21 ஆயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளது.

இது தொடர்பான ஏற்பாடுகளை பவ்ரல் அமைப்பு 21 தேர்தல் மாவட்டங்களிலும் மேற்கொண்டு வருகின்றது.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் உள்நாட்டு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தும் வகையில் ஆளணிகளைத் தற்போது திரட்டி வருகின்றனர்.

அத்துடன், இவ் அமைப்பு நாடளாவிய ரீதியில் சர்வோதய அமைப்புடன் இணைந்து அதன் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதே சமயம், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பவ்ரல் அமைபபு, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வெளிநாட்டு அமைப்பாகிய அறவழி சமாதானப் படையினருடன் (Nonviolent Peace Force) இணைந்து கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட இணைப்பாளரான எஸ்.நிர்மானுஜன் தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கான கண்காணிப்பாளர்களை சர்வோதயம், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கியூடெக் போன்ற நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளும் இப்போது செயற்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பணிபுரிய உள்ள ஆயிரத்து 274 கண்காணிப்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் பூர்த்தியடைந்ததும் இவர்களுக்கான பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விளக்கக் கூட்டங்களும் பயிற்சி வகுப்புகளும் நடாத்தப் படவுள்ளன.

அதே சமயம் பவ்ரல் அமைப்பு தேர்தல் கண்காணிப்புப் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பிரஜைகள் குழுக்களையும் நிறுவும் பணியில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இது இவ்விதமிருக்க இவ் அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 100 கணகாணிப்பாளர்கள் நடமாடும் கண்காணிப்புப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு சிலவெளிநாட்டு அமைப்புக்கள் அடுத்துவரும் நாட்களில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (உ-16)

## 645 பௌத்த பிக்குகளை ஜே.வி.பி கொன்றொழித்தது

### ஹெல உறுமய செயலாளர்

(ஜாயெல)

பௌத்த பிக்குகள் 645 பேரைப் படுகொலை செய்த ஜே.வி.பியினர் எவ்வாறு தம்மைச் சிங்கள பௌத்தக் கட்சி என மார்தட்டிக் கொள்ள முடியும் என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவத்த கேள்வி எழுப்பியுள்ளார்.


நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமயவின் கொழும்புச் செயலகத்தில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று இடம்பெற்றது. அங்கு கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் பௌத்த மதம் அரச மதமாக அங்கீகரிக்கப்படாது என்றும் அரசியல் பிரச்சினைகளுக்குள் பௌத்த பிக்குகள் தலையிடக் கூடாது எனவும் பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகள் அரச உடமைகளாக்கப்படும் என்ற தீர்மானங்கள் மேற்கொண்டு கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இக் கொள்கைகளுக்கு ஜே.விபியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆலோசனை வழங்கியிருந்தார்.

இவ்வாறு பௌத்த சாசனத்திற்கு பல துரோகங்களைச் செய்த ஜே.வி.பியினர் தம் மீது அரசியல் பரிவை ஏற்படுத்தவே பலவாறு நாடகமாடுகின்றனர் என்றார். (உ-64,4)







**யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே.சிவபாலன் அவர்களின் வீட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற இனம் தெரியாதோரின் அச்சுறுத்தல் நடவடிக்கையைக் கண்டித்து, நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் :- ஐங்கரன்)**

## தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் 8ம் நாள் நிகழ்வுகள்

# இறுதிப் போட்டியில் யாழ்அணி மட்டு.அணியை வெற்றிகொண்டது

நேற்றுக் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிக் கிரிக்கெற் போட்டியில் யாழ்.அணி மட்டுநகர் அணியை 7விககெற்றுக்களால் வெற்றி கொண்டது.

முன்னதாகத் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களால் தமிழீழத் தேசியக் கொடியேற்றத்துடனும் மாவீரர்களுக்கான மலரஞ்சலி, ஈகைச் சுடர்ரேற்றம் ஆகியவற்றுடனும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கிரிக்கெற் இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டு.அணியினர் முதலில் துடுப்பொடுத்தாடி 29.3ஓவர்களில் சகல விக்கெற்களையுமிழந்து 133 ஓடடங்களை எடுத்தனர். இதில் ஜெயசீலன் ஒரு சிக்ஸர் மூன்று பவுண்டரிகள் அடங்கலலாக 21 ஓட்டங்களையும் பிரபா 20ஓட்டங்களையும் மோசஸ் 17ஓட்டங்களையும் பெற்றனர். பநதுவீச்சில் ஜெயரூபன 3விக்கெற்றுகளையும், குணதாஸ், ஜதார்த்தன் ஆகியோர் தலா 2விக்கெற்றுகளையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.அணியினர் 18.4ஓவர் முடிவிலேயே 3 விக்கெற்றுகளை இழந்து 7விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றனர். இதில் தனஸ்காந் 36ஓட்டங்களையும் கௌரிபாகன் 25ஓட்டங்களையம் பெற்றனர். (யே-68)

# விளையாட்டு

# கரபந்தாட்ட அரையிறுதி, இறுதியாட்ட முடிவுகள்

(சுண்டிக்குளி)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவால் நடதத்ப்பட்டுவந்த கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களும், இறுதி ஆட்டமும் அண்மையில் இடம் பெற்றன.

அரையிறுதி ஆட்டமொன்றில் ஆவரங்கால் இந்து இளைஞா விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய விகனேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை 2:1என்ற செற்கணக்கில் 15:25,25:23,28:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக எஸ்.அப்புத்துரை, கே.கருணாகர்ன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இன்னோர் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஆவரங்கால மத்திய விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணியை 3 நேர் செற்களில் 25:20,25:21,25:21, 25:15என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக என்.முருகதாஸ், காந்தன், எஸ்.மகிந்தன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இப போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய ஆவரங்கால் இந்து இளைஞ் விளையாட்டுக்கழகஅணியை 3:1என்ற செற்கணக்கில் 25:23,20:25, 25:22,25:23என்ற புள்ளிகள அடிப்படையில் வென்று சம்பியன் ஆனது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக கே.கருணாகரன், எஸ்.மகிந்தன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

பெண்களுக்கான கரபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 3:1 என்ற செற்கணக்கில் 20:25,25:22, 25:19,25:23என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக எஸ்.அப்புத்துரை, கே.ஏகாம்பரம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (யே-110)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெயவல்லுநர் போட்டி இன்று மாலை 1.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைசசின் செயலர் அ.ஜெயரட்ணம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய சேவைககால உடர்கல்வி ஆலோசகர் தசிவகுமாரும் கலந்துசிறப்பிப்பர் (யே)

* * *

மானிப்பாய் மகளிர் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவை இணைந்து நடாத்தும் 2004ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைத் தேர்வுப் போட்டி இன்று மாலை 1.30மணிக்கு இடம்பெறவுள்ளது. வைத்திய க லாநிதி க.சிவனடியான பிரதமவிருந்தினராகக் கலந்துகொளளும் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வி.பசுபதிப்பிள்ளை (முன்னாள் அதிபர் மானிப்பாய் மகளிர் கல்லூரி) திருரீவிமலேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (யே-211)

* * *

(மூளாய்)

யா/பொன்னாலை வரதராஜபபெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர் வீ.மீனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் மானிப்பாய்க்கிளை பொது முகாமையாளர் நல்லையா ஜெயரெத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். நவாலி மகாவித்தியாலய அதிபர் கு.ஸ்ரீ விக்னேஸ்வரன் மற்றும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கி.சிவராஜா ஆகியோர் சிறபபு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-50)

## பந்து வீச்சுக்கு பயிற்சியாளர்

பாகிஸ்தான் செல்லும் இந்தியக் கிரிக்கெற் அணிக்கு பந்து வீச்சுக்கென தனிப்பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய கங்குலி பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் வெறறிக்குத் துடுப்பாட்டக்காரர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று கூறினார்.

கங்குலி தொடர்ந்தும் தெரிவிக்கையில், இறுதி ஆட்டங்களில் இந்திய அணி சிறப்பாக விளையாடுவதில்லை என ஒப்புக்கொள்வதாகவும் இது சரி செய்யப்படும் எனவும் பாகிஸதானுக்கு எதிரான போட்டிகளில் இரு தரப்பு வீரர்களுக்கும் வெற்றி பெற வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகவும் கூறினார். (யே-121)

# இங்கிலாந்து கிரிக்கெற் அணியினர் மே.இ.தீவுக்குச் சுற்றுப்பயணம்

மேற்கிந்திய தீவுகள் அணியுடன் 4 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 75 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணியினர் 25ஆம் திகதி மேற்கிந்தியா சென்றுள்ளனர். முதலில் பயிற்சிப் போட்டி ஒன்றில் இங்கிலாந்து அணியினர் மோதுகின்றனர். தொடர்ந்து 11ஆம் திகதி முதல் டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். இரு அணிகளும் பங்குபற்றும் போட்டிவிபரம் வருமாறு,

**டெஸ்ட் போட்டி விபரம்**

முதலாவது டெஸ்ட் போட்டி- மார்ச் 11-15 (ஜமேக்கா)
இரண்டாவது டெஸ்ட் போட்டி- மார்ச் 19-23 (டிரினிடாட்)
மூன்றாவது டெஸ்ட் போட்டி- ஏப்ரல் 1-5 (பார்படோஸ்)
நான்காவது டெஸ்ட் போட்டி- ஏப்ரல் 10-14 (அண்டிகுவா)

**ஒருநாள் போட்டி விபரம்**

முதல் ஒருநாள் போட்டி ஏப்ரல் 18 (கயானா)
இரண்டாவது ஒருநாள் போட்டி- ஏப்ரல் 24 (கயானா)
மூன்றாவது ஒருநாள் போட்டி- ஏப்ரல் 25 (பிரினிடாட்)
நான்காவது ஒருநாள் போட்டி- ஏப்ரல் 28 (சென்ஜோர்ஜ்)
ஐந்தாவது ஒருநாள் போட்டி- மே 01 (சென்லூசியா)
ஆறாவது ஒருநாள் போட்டி-மே2 (சென்லூசியா)
ஏழாவது ஒருநாள் போட்டி-மே5 (பாபடோஸ்)

(யே-121)

# ராஜிந்தர் வர்மா இந்தியாவில் புதிய கிரிக்கெற் சாதனை

இந்தியா-பாகிஸ்தான் கண்பார் வையற்றோர் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் இந்திய அணி 161ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 409 ஓடடங்களைக் குவித்தது. பார்வையற்றோர் கிரிக்கெற் உலகின் "சச்சின்" எனப் போறறப்படும் இந்தியாவின் ராஜிந்தர் வர்மா ஆட்டமிழக்காமல் 200ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் மன்வந்தர் வர்மா 79ஓட்டங்களை எடுத்தார். ராஜிந்தர் வர்மா பார்வையற்றோர் கிரிக்கெற் உலகில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்ற சாதனையை இதன் மூலம் படைத்தார்.

இந்த இமாலய இலக்கை அடைய முயன்ற பாகிஸ்தான் அணி அவசரப்பட்டு ஆடி விரைவாக விக்கெற்றுக்களை இழந்தது. இந்திய அணியின் துல்லியமான களத்தடுபபினால் பாகிஸ்தான் அணியின் 8வீரர்கள் ரண் அவுட்டாயினர்.


இறுதியில் பாகிஸ்தான் அணி 29ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும இழந்து 248ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பில் முகமது பயஸ் 65ஓட்டங்களையும் முகமது பாடி 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப் போட்டியின் வெற்றி நாயகனாக ராஜிந்தர் வர்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். (யே-121)


## உலக விளையாட்டு வலம்



இரு நபர்களைத் தாக்கிய குற்றச்சாட்டை ஏற்று மன்னிப்புக்கோரிய முன்னாள் அதிபாரக் குத்துச்சண்டை வீரர் மைக்டைசன் 100மணித்தியாலங்கள் சமூகசேவை செய்ய நீதிபதி முன் ஒப்புக்கொண்டார்.




டுபாய் பகிரங்க டெனிஸ் போட்டியில் நீண்ட இடைவெளிக்குப் பின் விளையாட வந்த வீனஸ்வில்லியம் முதல் சுற்றிலேயே தோற்றுப் போனார்.



மூனறு கோல்கள் அடித்த ஓ நீல்ஸ் அணியின் லார்சன் (யூபாக்கிண்ணப் போட்டி)



லிவர்ப்பூல் அணியின் ஹரி கியூவெல் சக வீரர்களால் பாராட்டுப் பெறும் காட்சி



லிவர்பூல் அணியின் தலைவர் வெற்றியைப் பகிர்வதற்காக மனேஜரிடம் (யூபாக்கிண்ணப் போட்டி)



பல்கேரியா அணியின் மூர்க்கத்தனமான மோதலை முறியடித்துக் கோல்போட்ட மகிழ்ச்சியில் ஸ்ரீபன் ஜெரால்ட் (யூபாக்கிண்ணப்போட்டி).



மிக அற்புதமான லிவர்பூல் கோலக்கீப்பர் ஷேயைத் தாண்டிப்பந்து நெற்றுக்குள் நுழைகிறது.




ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராகும் அமெரிக்கக் குண்டெறிதல் வீரர் கெவின் டோத்



அழைப்புக்காகக் காத்திருக்கும் மாற்றீடு அலன் சியாரா.



நட்சத்திர வீரர் கிறெய்க் பெலாம் இடைவிடாத முயற்சியின் பின் அற்புதமான கோல் ஒன்றைப் போட்டார்.



லிவர்பூல் அணியின் மைக்கல் ஓவன் அற்புதமாகத் தலை கொடுத் தாடியும் அதிர்ஷ்டம் அவருக்குக் கைகொடுக்கவில்லை.

# இனவாதம் பேசும் ஊடகங்களை தடை செய்வதில் தப்பில்லை

## கிழக்கு பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் மூக்கையா

(கொழும்பு)

**கருத்துச் சுதந்திரம் என்பது மக்களுக்காக, மக்களால், மக்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்ற அரசுகள் நிலைத்திருக்கவேண்டுமென்ற கோட்பாடுகளின், வளர்ச்சியின் பின்னர் ஏற்பட்ட முக்கியமானதோர் சிந்தனையாகும்.**

**நாட்டில் ஜனநாயக ஆட்சி சிறந்த முறையில் நடைபெற வேண்டுமானால், மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவேண்டும். அது அவர்களுடைய உரிமை. கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் தொழிற் சுதந்திரம் போன்ற அனைத்து சுதந்திரங்களும் இருக்கும் ஓர் நிலைதான் சிறந்த ஜனநாயக ஆட்சிக்குரிய இலக்கணமாகும் என கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சி.மூக்கையா தெரிவித்துள்ளார்.**

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்ட விடியும் வேளை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

சில ஊடகங்கள் செய்திகளை வெளியிடும் போது உண்மைக்குப் புறம்பாக, உள்ளவற்றைத் திரிவுபடுத்தி வேறு வடிவத்தில் கொடுக்கின்றன. அதில் அடிப்படைக் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பாகவே காணப்படுகின்றன.

இதைவிட, சில ஊடகங்கள் வியாபார நோக்கத்திற்காகச் செய்திகளை வெளியிடும்போது செய்தியின் உள்ளடக்கம், சாராம்சம் வேறாகவும், தலையங்கங்கள் வேறாகவும் பிரசுரிக்கின்றன. ஏதோவோர் விடயத்திற்கும் அரசியலை அதனுடன் இணைத்துப் பரபரப்புச் செய்திக்காக இல்லாத ஒன்றை உண்டெனக்காட்டி அரசியல் விடயங்களைத் தலைப்பாகப் போடுகின்றன.

இவையெல்லாவற்றையும் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்று கூறமுடியாது. உள்ளதை உளளபடி, உண்மைகளைத் திரிவுபடுத்தாமல் வெளியிடவேண்டியது ஊடகங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவமாகும். ஊடகங்கள் உள்நோக்கங்கள், விரோதங்களைக் கைவிட்டு நேர்மையுடன் செயற்படவேண்டியது மிகமிக முக்கியமாகும்.

இனக்கலவரங்களோ அன்றி மதக்கலவரங்களோ இடம்பெறும் பட்சத்தில், ஊடகங்கள் இதுதொடர்பாகச் செய்திகளை வெளியிடும் போது மிக அவதானத்துடன் செயற்படவேண்டும். சில ஊடகங்களின் தவறான செய்திகள் கலவரங்களை மீண்டும தூண்டுவனவாக அமைந்துவிடும். எனவே, சமூகத்தைப் பாதிக்கும் இவ்வாறான விடயங்களை வெளியிடுவதில் ஊடகங்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோன்றதான செய்திகளை வெளியிடாது, ஊடகங்கள் அனைத்தும் மக்களின் மனநிலை, சமூகம் மற்றும் சமுதாயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, கருத்துச்சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் போன்றவற்றைத் தனித்துவமாகக் கொண்டு செய்திகளை வெளியிடவேண்டும்.

சில பத்திரிகைகள் தகவல்களைக் கொடுக்கும்போது தேவையற்ற விடயங்களை உள்ளடக்கி இனம், மதம் மற்றும் இன்னோரன்னவற்றைக் குறிப்பிட்டு செய்திகளை வெளியிடுகின்றன் இவை பத்திரிகை தர்மத்தை மீறும் செயற்பாடுகளாகும்.

இவ்வாறு நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தும் ஓர் சமூக தீவிரவாதமாகச் செயற்படும் ஊடகங்களைத் தடைசெய்வதில் எதுவித தவறும் இல்லை. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது.

அத்துடன் ஓர் பத்திரிகையின் உயிர்நாடியாக விளங்கும் ஆசிரியர் தலையங்கம் என்பது நாட்டின் அரசியல் நிலவரங்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய விடயங்களினதும் சாராம்சமாக அமைய வேண்டும்.

எந்தவொரு அரசியல் கட்சியையும் சார்ந்து, அவர்கள் சார்பான ஒருமுகக் கருத்துக்களை மாத்திரம் வெளியிடாது, பரந்துபட்ட கருத்துக்களை உள்ளடக்கி ஊடகச் சுதந்திரத்திற்கு உட்பட்டுச் செயதிகளையோ, ஆசிரியர் தலையங்கங்களையோ கொடுக்கவேண்டும். இது மிகவும் இன்றியமையாததொன்றாகும் எனக் குறிப்பிடடுள்ளார். (உ-18)

# துரோகத்தனம் மிக்க வேட்பாளர்களைத் தமிழர்கள் தூக்கியெறிய வேண்டும்

## ரவிராஜ் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பரிபு,ரணமான ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும எடுத்துக்காட்டும் வகையில் அனைத்து மக்களும் இந்தத் தேர்தலில் தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேடபாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நடராஜா ரவிராஜ சாவகச்சேரி பொதுச் சந்தையிலநேற்று முன்தினம் நடாத்திய முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் தலைவரான டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றியிருந்தனர்.

ரவிராஜ் அங்கு தொடர்ந்து பேசும்போது,

இன்றைய காலகட்டத்தில் இத்தோதல் மிகவும் முக்கியமானதாகும். இத்தேர்தல் முடிவுகளை சர்வதேசமும் சிங்கள பேரினவாதிகளும் மிகவும் ஆர்வத்துடன் உற்றுநோக்கிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, இத்தேர்தலில் பொதுமக்களாகிய நீங்கள் சிந்தித்துச் செயல்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எம் மத்தியில் எத்தகைய வேறுபாடுகளும் இல்லை. நாம் எமது கொள்கையுடனும் இலட்சியத்துடனும இறுக்கமாக இருக்கின்றோம். இன்று எம்மத்தியில் தேர்தல்களதில் குதித்துள்ள வேட்பாளர்கள் சிலரின் அரசியல் துரோகத்தனங்கள், காட்டிக் கொடுப்புக்கள் பற்றிப் பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். வாக்காளாகள் தமது நிலைப்பாடு குறித்து தீர்க்கமான முடிவினை எடுப்பார்கள். தமது ஐக்கியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் காட்டுவார்கள் என நாம் நம்புகின்றோம் என்றார்.

தென்மராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் அருளானந்தம் அங்கு குறிப்பிடும் போது,

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நிறுத்தப்பட்டுள்ள தென்மராட்சியின் மைந்தனான ரவிராஜின் வெற்றிக்காக நாம் எல்லோரும் அயராது பாடுபடவேண்டும்.யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட சாவகச்சேரி நகரைப் புனரமைப்புச் செய்ய வேண்டிய பாரிய தேவை எம் முன் உள்ளது.

எது எப்படியிருப்பினும் இன்றைய நிலையில் எமது கொள்கையும், இலட்சியமும் முக்கியமானதாகும. இநத வகையில் தென்மராட்சி மக்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (உ-16)

# இலங்கையர்கள் சித்தாந்த அடிப்படையில் வளர்க்கப்படவில்லை

## விஜிதயாப்பா

இலங்கை மக்கள் எந்த ஒரு காலத்திலும் எந்த ஒரு அரசியல் தலைவர்களாலும்,எந்த விதமான சித் தாந தங்களினடிப்படையிலும, வளர்த்தெடுக்கப்படவில்லை. இவ்வாறு கூறினார் இலங்கையின் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான விஜிதயாப்பா.

வலம்புரியின் தேர்தல்களம் பகுதிக்கு அளித்த விஷேட பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்ட கருத்தைக் கூறினார். உணர்ச்சிகளை உசுப்பிவிட்டு வாக்கு வேட்டை நடாத்திவரும் அரசியல் கலாசாரத்திற்குப் பழக்கப்பட்டுப் போன நமது வாக்காளர்களின் தீர்ப்பு இலங்கை அரசியலில் இது வரைகாலமும் எதைச்சாதித்தது? இந்தத் தேர்தலில் எப்படி இருக்கப் போகிறது? என்று கேட்டதற்கு,

உண்மைதான் இலங்கை மக்களை எந்த அரசியல் தலைவர்களும் எந்த சித்தாந்ததினடிப்படையிலும் வளர்த்தெடுக்கவில்லை. தவறு தலைவர்களுடையதே, அதன் விளைவுகளை நாடு நன்கு அனுபவித்திருக்கிறது. இதன் தாக்கத்திலிருந்து விடுபட இன்னும் சில தசாப்தங்கள் எடுக்கக் கூடும். ஆயினும், மூன்று தசாப்தத்திற்கு முன்பிருந்ததைவிட மக்களிடம் ஓரளவு அரசியல் விழிப்புணர்வு வந்திருக்கிறதென்றே கூற வேண்டும் என்று சொன்னார்.

சந்திரிகா அம்மையாரின் ஐக்கிய மக்கள் கூட்டு முன்னணிக்கு சர்வதேச அங்கீகாரம் எந்த அளவுக்கு இருக்கிறது அல்லது மேற்கு நாடுகளிடம் அவர்களது தேர்தற் கால மாற்றங்கள் எடுபடும் என்று நினைக்கிறீர்களா? என்று கேட்டதற்கு, உண்மைதான் தற்போதைய உலக ஒழுங்கு மாறியிருக்கிறது. இடது சாரிகளின் அரசியல் பொருளாதாரம் என்பது கையேந்து நிலையில்இருக்கிறது. உலகம் பொதுவாக முதலாளித்துவப் பொருளாதார வலலரசுகளை அண்டிப் பிழைக்கும் நிலையே காணப்படுகிறது. இதே நிலமை இந்தக் கூட்டணியின் கருத்துக்களிலும் தெளிவாகவே தெரிகிறது. மயிர் கூச்செறியும் இடதுசாரிக் கருத்துக்கள் அடக்கி வாசிக்கப்படுகிறது. ஒரு வேளை இவ்வணி வெற்றி பெற்றாலும்கூட மேற்குலகம் கிழிக்கும் கோட்டை இவர்கள் தாண்டி ஆட்சிநடத்துவது முடியாத காரியம் என்பதுமட்டும் உண்மை.

நீங்கள் கூறுவது போல அவர்களுக்கு வெற்றிபெறும் வாய்ப்புக்கள இருப்பதாக நினைக்கிறீர்களா? என்று கேட்டதற்கு யார் வெற்றிபெறுவார், யார் தோல்வியடைவார் என்று சொல்வதைவிட இந்தத் தேர்தல் ஒரு தொங்கு பாராளுமன்றத்தை நோக்கியே நம்மை நடத்திச் செல்வதாக நான் எண்ணுகிறேன் என்றார்.

ரணில், சந்திரிகா இவ்விருவரில் யாரோடு பேசப் புலிகள் விரும்புவர்? உஙகளுடைய கடந்த கால அவதானிப்புக்களிலிருந்து பதில் கூறுங்கள் என்று கேட்டதற்கு இந்தக்கால கட்டத்தில் இவ்விருவரிடமும் இக் கேள்வியைக் கேட்டால் இருவரும் என்ன சொல்வார்களோ தெரியாது. எதற்கும் புலிகளின் தலைவரிடம் இக்கேள்வியைக் கேட்டுப்பாருங்கள் என்று சுவாரஷ்யமாக முடித்தார் யாப்பா. (யே)

# தேர்தல் செலவை சமாளிக்கவே லொத்தர் சபை பறிக்கப்பட்டது

## ஜனாதிபதி மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜேவி.பியும் இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் செலவிற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றிருப்பதாக ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதியை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றபோது மகாபொல புலமைப்பரிசில் நிதியம் உட்பட ஏனைய பல நிதியங்களும் பெரும்நெருக்கடிக்குள்ளாகும் எனவும், ஐக்கியதேசியக் கட்சி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஐக்கியதேசியக் கட்சியின் இந்தக் குற் றச்சாட்டை ஜனாதிபதி செயலகம் முற்றாக நிராகரித்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர்சபை கடந்த பல மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளதாகவும்,

ஜனாதிபதி நிதியத்திற்குரிய நிதியை பெற்றுக் கொடுக்கத் தவறியமையினாலேயே ஜனாதிபதி, அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை எற்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (த-61,10)

## தேர்தல் களம்

# நியாயமான தேர்தலை நடத்தக் கோரி தேர்தல் ஆணையாளருக்கு மகஜர்

## வவு. பொது அமைப்புக்கள் அனுப்பிவைப்பு

(வவுனியா)

எதிர்வரும் பொதுத்தேர்தல் சுதந்திரமானதாகவும் நியாயமானதுமாக நடத்தப்படவேண்டும் எனக் கோரி வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்கள் ஒன்றியம் தேர்தல் ஆணையாளர் ரி.திஸநாயக்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

நேற்று முன்தினம் அனுப்பப்பட்ட இம் மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்கவுள்ளனா. இவர்கள் சுதந்திரமாக தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும்.

மாறாக கடந்த காலத்தேர்தலில் மேற்கொள்ளப்பட்டதுபோல சுதந்திர வாக்களிப்புக்கு இடையூறு விளைவிக்கும் அரச படையினரின் செயல்கள் இம்முறை இடம்பெறக் கூடாது.

தமிழ் மக்கள் தமது வாக்குரிமை மூலம் தம் தலைவிதியைத் தீர்மானிக்க முன்வந்துள்ளனர். இந்த உணர்வுகளை சிதைக்கும் வகையில் இராணுவத்தளபதி லயனல் பல்கல்ல விடுத்திருக்கும் அறிவிப்பு அமைந்துள்ளது.

சோதனைக் கெடுபிடிகளுடன் வாக்களிக்க அனுமதிப்பது என்ற அவரின்அறிவிப்பு மக்களின்மன உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவாறு அமைகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இதனைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளராகிய நீங்கள் சிறந்த தீர்மானத்திற்கு வரவேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-64,4)

### கல்விக் கொள்கையை எதிர்த்து

# 10 ஆயிரம் பட்டதாரிகள் கூடி கொழும்பில் போர்க் கொடி

(கொழும்பு)

அடுத்தவாரம் 10ஆயிரம் பேரை கொழும்புக்கு அழைத்து கல்விக் கொள்கைகளை ஆட்சேபித்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அனைததுப் பல்கலைக கழக மாணவர் பேரவையின் அமைப் பாளர் ரவீந்திர முதலிகே தெரி வித்துள்ளார்.

சகல பல்கலைக்கழகங்களி லும் உள்ள மாணவ, மாணவிகள் மற்றும் விரிவுரையாளர்கள் உட் பட சுமார் 10 ஆயிரம்பேர் கலந்து கொள்ளவுள்ள இந்த ஆர்ப்பாட் டம் இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைத்துணிகள் விநி யோகத்தை நிறுத்துவதற்கு எடுக் கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு எதிராக நடத்தப்படவுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பாட சாலை மாணவர்களின் கல்வியைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவ டிக்கை எடுக்க வேண்டுமென வலி யுறுத்தப்படும் என மாணவர் பேர வையின் அமைப்பாளர் ரவீந்திர முதலிகே மேலும் தெரிவித் துள் ளார் (உ-60,10)

# தென்கொரியா செல்வதை தவிர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாகத் தென்கொரி யாவில் தங்கியிருக்கும் வெளி நாட்டுத் தொழிலாளர்கள் தொடர் பான சட்டதிட்டங்களைக் கடுமை யாக அமுல்படுத்துவதற்கு அந் நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணி யகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாகத் தென்கொரி யாவில் தங்கியுள்ளவர்கள் இம் மாதத்திற்குள நாட்டைவிட்டு வெயி யேற வேண்டும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளதுடன் அவவாறு வெளியேறத் தவறுவோா களுக்கு கடுமையான தண்டனை களை வழங்கவும் தீர்மானித்துள் ளது.

எனவே, தற்காலிக உல்லாசப் பயண விசா அனுமதிப் பத்திரங் களைப் பெறறு தொழில்தேடி தென் கொரியா செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என இலஙகை யின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இலங்கையர்களைக் கேட்டுள்ளது.

(உ-60,10)

### அரசாங்க விடுதிகளில்

# 5 வருடங்களுக்கு மேல் வசிக்கும் அரச ஊழியர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபைக் குச் சொந்தமான அரச விடுதி களில் 5வருடங்களுக்கு மேல் வசிக் கும் அரச ஊழியர்களை உடன டியாக வெளியேற்றுமாறு மகாண பொதுநிர்வாக அமைச்சின் செய லாளர்களுக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெய வர்த்தன பணிப்புரைவிடுத்துள் ளார்.

அரச ஊழியர்கள் பலா தமது சொந்த வீடுகளைப் பெருந்தொகை வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரச விடுதிகளில் தங்கியிருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப பதாகவும் இதனாலேயே தாம் இத் தகைய பணிப்புரையை விடுத் துள் ளதாகவும் மாகாண ஆளுநா அசோக ஜெயவர்த்தன மாகாண பொதுநிர் வாக அமைசசின் செயலாளருக்கு விளக்கியுள்ளார். (உ-60,10)

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கூடுதலான வெளிநாட்டுக் கண் காணிப்பாளர்களைப் பணியில் ஈடு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகத் தேர்தல் செய லகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொதுநலவாய அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 100 கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாகவும் தேர்தல் செய லகம் மேலும் தொவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில கண் காணிப்பாளர்களாகக் கடமையாற்று மாறு பாகிஸ்தான் மற்றும் பிலிப் பைனஸ் நாட்டுக் கண்காணிப்பாளா களுக்கு விடுக்கபபட்ட அழைப்பை மேற்படி இருநாடுகளின் அரசாங் கங்களும் நிராகரித்துள்ளன.

பாகிஸ்தான் பிலிப்பைன்ஸ் நாடுகளில் தற்போது தேர்தல்கள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறவுள்ளதால் இலங்கை விடுத்த அழைப்பைத் தாம் ஏற்றுக கொள்ள முடியாதிருப்பதாகவும் அந்நாடுகளின் அரசாங்கங்கள் இலங்கை தேர்தல் ஆணையாள ருக்கு அறிவித்துள்ளன.

இதேவேளை, 2001ஆம் ஆண்டு நடைபெறற தேர்தலின்போது 75 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந் தமையும் இங்கு குறிப்பிடத்தக் கது.

(உ-60,10)

### வடமராட்சி மீனவர்களுக்கு

# 30 மில்லியன் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை நெக்கொட் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு-கிழக்கு பிர தேசங்களில் உள்ள 18 கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு நெக்கொட் நிறுவனம் 30மில்லியன் ரூபா பெறு மதியான கடற்றொழில் உபகரணங் களை வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 78கண் ணாடி இழைப்படகுகளும், 147மோட் டார் இயந்திரங்களும், 210 கட்டு மரங்களும், 51லட்சத்து 96ஆயி ரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும் வழங்கப்படவுள்ள தாக யாழ்ப்பாண மாவட்ட கடற் றொழில் நீரியல் திணைக்கள உதவி ஆணையாளர் ஏ.ஜோசப் தெரிவித்தார்.

நெக்கொட் நிறுவனத்தின் நிதி யுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தினை யு.என்.டி.பி.நிறு வனம், கடற்றொழில்அமைச்சு மற் றும் 4 கூட்டுறவுத்திணைக்களம் ஆகியன மேற்பாவை செய்யவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள நீரியல் திணைக் களத்தில் உதவி ஆணையாளர் ஏ.ஜோசப் தலைமையில் நடை பெற்றமைகுறிப்பிடத்தக்கது.(உ-16)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும்

### இந்தியத் தூதரகத்திற்கு எடுத்துரைப்பு

(கொழும்பு)

இந்தியாவின் தமிழக மீனவர் களுக்கும், இலங்கைத் தமிழ் மக் களுக்கும் இடையில் தொப்புள் கொடி உறவு நிலவுவது அனை வரும் அறிந்த ஒன்றாகும். எனி னும், இந்த உறவில் கீறல் விழும் வகையிலான சம்பவங்கள் பாக்கு நீாிணைக் கடற்பரப்பில் அண்மைக காலங்களில் அதிகரித்துள்ளது குறித்து ஆழ்ந்த கவலை கொண் டுள்ளோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் செயலாளர் நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தா கொழும் பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டுவந்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மீனவர்கள் கடல்வலய தடைச்சட்டம், மற் றும் ஆழ்கடல் மீனபிடிக்கான தடை என்பன காரணமாக அண்மைக் காலம்வரை வெகுவாகப் பாதிக் கப்பட்டிருந்தனர்.

தற்போது இவ் விடயங்களில் தளர்வு ஏற்பட்டுள்ளதையடுத்து மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவ தில் பெரும் நாட்டம் கொண்டுள் ளனர்.

ஆனால், மீனவர்களின் இந்த ஆர்வத்தைப் பயன்படுத்தும் சில சக்திகள் இருதரப்பு உறவுகளுக்குக் குந்தகம் ஏற்படும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

இது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துவது மனவருத்தத்திற்கு உரியதாகும். இரு தரப்பினரதும் நல்லெண்ணப புரிநதுணர்வின் அடிப் படையில் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தகுந்த சூழல் உரு வாக்கப்பட வேண்டுமெனப் பெரி தும் விரும்புகின்றோம். என்று கொழும்பிலுள்ள இந்திய தூதர கத்திற்கு டக்ளஸ் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(உ)

# சமாதான நீதவான் மீது இனந்தெரியாதோர் தாக்கு

(வன்னி)

மாங்குளம் பகுதியில் சமாதான நீதவான் ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டதில் தலையில் காயமடைந்துள்ளார்.

இவ்வாறு காயமடைந்த சமா தான நீதவான் அருகிலுள்ள திலீ பன் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

நள்ளிரவு 12.00மணி வேளை யில் குறிப்பிட்ட சமாதான நீத வானான தாமோதரமபிள்ளை ஸ்ரீஸ் கந்தராசா அரவது வீட்டில் நித் திரையில் ஆழ்ந்திருந்தவேளை வீட்டுக்கதவு தட்டப்பட்டதாகவும் கத வைத் திறந்தவேளை வெளியில் நின்றநபர்கள் சமாதான நீதவானின் தலையில் தடியொன்றினால் பல மாகத் தாக்கியதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான சமா தான நீதவான் கூச்சலிட்டதை அடுதது அயலில் உள்ளவ்கள் அவரை அருகிலுள்ள திலீபன் மருத்துவ மனையில் அனுமதித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் தமிழீழக காவல்துறை யின் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# 52 பாடசாலைகள் படையினர் பிடியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக 52பாடசாலை கள் மூடப்பட்டு இருப்பதால் கல் விச் சமூகம் வெகுவாகப் பாதிக் கப்படடிருப்பதாகத் தமிழராசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு பாடசாலைகள் மூடப் பட்டிருப்பதால் ஆயிரத்து 500ற் கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பல ஆயிரககணக்கான மாணவர்களும் வெகுவாகப் பதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட ஐக்கியநாடுகள் சபை யில் கல்விக் கொள்கையின்படி ஒவ்வொரு மனிதனுக்கும் தன் கல் வியை சுதந்திரமாகத் தொடர உரிமையுண்டு. ஆனால் எமது பிர தேசத்தில் அது மறுக்கப்படுகிறது. இராணுவத்தினரின் பாதுகாபபு நட வடிக்கைகள மாணவர்களின் இயல் பான கல்வியை குழப்புவதாகவே அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-64,4)

# போட்டித் திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்தும் வடமாகாண பாடசாலை களிற்கிடையான விஞ்ஞானக் கண காட்சிப் போட்டித் திகதிகள் பிற் போடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25,26,27ஆம் திகதி களில் இப் போட்டிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் க.பொ.த.உயர்தர மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு இப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 11,12,13ஆம் திகதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப பாண விஞ்ஞான சங்கம் அறிவித் துள்ளது.

(உ-4)

# தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஒரு தொகுதி தளபாடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக் கான தளபாடங்கள் மற்றும் உப கரணஙகளில் ஒருதொகுதி அண்மை யில் கல்லூரியை வந்தடைந்துள் ளன.

கல்லூரியின் தளபாடப் பற்றாக் குறையால் மாணவர்கள் எதிர் கொண்ட சிக்கல்களை சுட்டிக் காட்டி கல்லூரி நிர்வாகம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக இத் தளபாட உபகரணஙகள் மூன் றாம் நிலைககல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும ஒரு தொகுதி தளபாட உபகரணங்கள் மேற்படி கல்லூரிக்கு மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(உ-19)

### கிளி.இல் வெடிபொருள் அபாயம்

# 2 ஆயிரத்து 83 குடும்பங்கள் மீளக் குடியமர முடியாதநிலை

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நில வும் வெடிபொருள அபாயத்தினால் 2ஆயிரத்து 83 குடும்பஙகள் மீளக் குடியேற முடியாதநிலையில் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு மீளக்குடியமர முடி யாதநிலையில் வாழ்வோர் பல் வேறு பிரதேசங்களிலும் உள்ள நலன்புரிநிலையங்களிலும் தங்கி யுள்ளனர்.

அடிபபடை வசதிகள் குறைந்த நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் இவர்கள் பலத்த சமூக பொருளாதார சுகாதார நெருக் கடிகளையும் எதிர்கொண்டுள்ள னா.

அந்தவகையில் கரச்சிப்பிரதேசத் தைச் சேர்ந்த நலனபுரி நிலை யங்களில் 740 குடும்பங்ளைச்சேர்ந்த 2ஆயிரத்து 986பேரும், கண்டாவ ளைப் பிரதேசத்தில் உள்ள நலன் புரி நிலையங்களில் 740 குடும்பங் களைச்சேர்ந்த 3ஆயிரத்து 29பேரும பூநகரியில் உள்ள நலன்புரி நிலை யங்களில் 593 குடும்பங்களைச் சேர்ந்த 236பேரும் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

(உ-64,4)

# சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டைவிட்டு தப்பியோடிய சிறு வர்கள் மூவர் விடுதலைப்புலிக ளால் பெற்றோாகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

உருமபிராய் அன்னங்கையைச் சேர்ந்த ரி.பிரதீபன் (வயது 15) எஸ்.வினோதன் (வயது 14) ஜோ.ஜோன்சன் (வயது 18) ஆகிய மூவருமே இவ்வாறு கடந்த 23ஆம் திகதி பெற்றோர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

கண்காணிப்புக்குழுவினா, யுனி செவ் அதிகாரிகள் முன்னிலை யில் வைத்து யாழ்.மாவட்ட அரசி யல்துறையினரால் இவ் சிறுவர் கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

(உ-4)

## இன்று ஒரு தகவல்

# நான் எங்கே?

ஒரு தேசத்தில் ஒரு ராஜா அந்த ராஜாவின் பெயர் மாலின்ட். அந்தத் தேசத்தில் ஒரு பெரிய துறவயும் இருந்தார். அவரது பெயர் நாகசேன். அந்தத் துறவி நமது அரண்மனைக்கு வந்து ஆசீர்வதித்தால் நன்றாக இருக்கும் என எண்ணினான் அந்தமன்னன்.

உடனே ஒரு தூதுவனை அனுப்பி அவரை அழைத்துக் கொண்டுவரச் செய்தான். ஒருதேரையும் அனுப்பினான். அழைத்துக் கொண்டு வருவதற்கு. அவன் சென்று துறவியைப் பார்த்தான். "நாகசேன் துறவியாரே! எங்களது மன்னன் உங்களைப் பார்க்க விரும்புகிறார். நான் உங்களை அழைத்துக் கொண்டு போகத் தான் விரும்புகின்றேன்" என்றான். அதற்கு அந்தத் துறவி "நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவு செய்து என்னை மன்னித்துவிடு. இங்கு நாகசேன் என்று ஒருவரும் இல்லை. அது வெறும் பெயர்தான். அது ஒரு தற்காலிகமான முத்திரைதான் வேறொன்றுமில்லை" என்றார்.

என்ன இது... வித்தியாசமான ஆளாக இருக்கின்றாரே என்று நினைத்துவிட்டான் கூப்பிடவந்தவன். அதன்பின் ராஜா அனுப்பிய தேரில் ஏறி அரண்மனைக்கு வந்து சேர்ந்தார் துறவி. அரண்மனை வாசலில் நின்று கொண்டிருந்த மன்னன் ஓடிவந்து "நாகசேன் துறவி அவர்களே! நான் உங்களை வரவேற்கிறேன்" என்றான்.

இதைக்கேட்டதும் அந்தத் துறவி சிரிக்க ஆரம்பித்து விட்டார். "நாகசேனுக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நாகேசன் என்ற பெயரில் யாரும் இங்கு இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. "துறவியாரே! நீங்கள் புதிர் போட்டுப் பேசுகிறீர்கள் என எண்ணுகிறேன். நீங்கள் நீங்களாக இல்லாவிட்டால் எனது அழைப்பை ஏற்று இங்கு வந்திருப்பது யார்?" என்று கேட்டான்.

உடனே அந்தத் துறவி பின்னால் திரும்பிப் பார்த்தார். அவர் ஏறிவந்த தேர் நின்று கொண்டிருந்தது. இதுதானே நான் ஏறி வந்த தேர்? என்றார். "ஆமாம்" என்றனர். அதில் பூட்டிய குதிரைகளை அவிழ்க்கச் சொன்னார். அவிழ்த்து விட்டனர். துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி "இது தான் நான் ஏறிவந்த தேரா?" என்றார். "இல்லை இது குதிரை. இது எப்படித் தேர் ஆகமுடியும்!" என்றனர். "சரி...குதிரையை அப்பால் ஓட்டிக் கொண்டு போங்கள். அது பூட்டியிருந்த நுகத் தடியை எடுங்கள்" என்றார். எடுத்தனர். "இந்த நுகத் தடிதான் தேரா?" என்றார். இல்லை என்றனர்.

அதன்பின் அந்தச் சக்கரத்தைக் கழற்றச் சொன்னார். இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்தெடுக்கச் சொல்லி இது தான் தேரா என்று கேட்டுக் கொண்டே வந்தார். இவர்களும் இது இல்லை. அது இல்லை என்று கூறினார்கள். இறுதியாக எல்லாவற்றையும் பிரித்தெடுத்தபின் அங்கே ஒன்றுமில்லை.

இப்போது அந்தத் துறவி கேட்டார்."இப்போது உங்கள் தேர் எங்கே போனது. அதிலிருந்து எடுத்த ஒவ்வொரு பகுதியையும் இதுதேர் இல்லை என்று கூறிவிட்டீர்கள். அப்படியாயின் தேர் எங்கே இருக்கின்றது? என்று கேட்டார்.

மன்னன் விழிக்க ஆரம்பித்தான். இப்போது அந்தத் துறவி சொன்னார். "தேர் என்று தனியாக எதுவுமில்லை அது போல் நான் என்று தனியாக எதுவும் கிடையாது. நமது உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அகற்றிப் பாருங்கள் கடைசியில் ஒன்றும் கிடையாது. அன்பு என்பது இந்த ஒன்றுமில்லாத தன்மையில் தான பிறக்கிறது. இந்த ஒன்றுமில்லாத தன்மைதான் கடவுள்" இது ஒரு பெரியவர் கொடுத்த விளக்கம்.

நமது ஆள் இந்த தத்துவத்தை தப்பாக உபயோகபபடுத்த முயற்சிப்பது உண்டு. ஒரு ஆள் கடன் வாங்கி விட்டான. கடன் கொடுத்தவன் இவனைத் தேடி அலைந்து கண்டு பிடித்தான். நடுத்தெருவில் ஒருநாள் கெட்டியாகக் கையைப் பிடித்துவிட்டான். "வாங்கிய கடனுக்கு வழி சொல்லிவிட்டுப் போ" என்றான்.

இவன் சொன்னான். "இதோ பாரப்பா! உண்மையிலேயே நான் என்று ஒனறும் கிடையாது. அது ஒன்றுமில்லாத ஒரு தண்மை அதனால் நான் உன்னிடம் கடன் வாங்கியதாகக் கூறுவது பொய் என்றான். அதற்கு அவன் சொன்னான் நீ கூறுவது உண்மை தான் என்னிடம் கடன் வாங்கியது நீ இல்லை உனது இந்தக் கைதான். அதனால் இந்தக் கையைமட்டும் பிடிக்கின்றேன். உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். நீ பயப்படாதே இந்தக் கையை மட்டும் தான் தனியாக எடுத்துக் கொண்டு போகப் போகின்றேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.ம. சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கத் தயார்

## ரவூப் ஹக்கீம் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இருந்ததைவிட, கூடியளவு ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒதுக்கித்தர சம்மதித்தால், அதற்கு ஆதரவளிக்கத் தாம் தயார் என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதே எமது நோக்கம். இந்த வகையில் எமக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக ஆசனங்களை ஒதுக்கித் தருமானால் அதற்கு நாம் எமது ஆதரவை வழங்குவோம்.

முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கினோம். அதனைவிட அதிக ஆசனம் வழங்க சுதந்திர முன்னணி முன்வருமானால் அதற்கு எமது ஆதரவை வழங்குவோம். எமக்குப் பாராளுமன்ற ஆசனங்கள் தான் முக்கியம்.

எமது கட்சி ஏற்கனவே ஐ.தே.முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கிறது. எனினும், எமது தேவை கருதி நாம் சுதந்திர முன்னணிக்கும் ஆதரவு வழங்கத் தயாராகவே இருக்கிறோம் என்றும் ஹக்கீம் மேலும் கூறினார். (இ-6)

# கண்ட கண்ட இடங்களில் கழிவுகளை கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை

## எச்சரிக்கிறார் யாழ்.மாநகர ஆணையாளர்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் காணப்படும் வீதிகளில் கழிவுப் பொருட்களை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

கட்டடப் பொருட்கள், இரும்புக்கழிவுகள், பாவனைக்கு உதவாத வாகன உதிரிப்பாகங்கள், குப்பைகள் என்பன வீதிகளின் ஓரங்களில் கொட்டப்படுகின்றன.

இதனால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றதால் வீதி ஓரங்களில் இவ்வாறான பொருட்களை வீசுவதைத் தவிர்க்குமாறு அவர் கேட்டுள்ளார்.

கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவது கண்டு பிடிக்கப்பட்டால் நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மிருகங்கள் வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச-51)

## இராசி பலன்

**28. 02. 2004**

**(மாசி 16, சனிக்கிழமை)**

| | |
|---|---|
| அட்டமி முன்னிரவு | 10.41 வரை |
| ரோகினி பின்னிரவு | 2.13 மணி வரை |
| இராகுகாலம் | 9.29- 10.59மணிவரை |
| சுபநேரம் | 3.29-4.59 மணிவரை |

**மேடம்**

அமைதிக் குறைவு, காரிய அலைச்சல், தன விரயம், தொழிலில் ஆர்வம்.

**இடபம்**

விருந்துபசாரம், பெரியோர் உதவி, முயற்சி கைகூடும், புதியதிருப்பம்.

**மிதுனம்**

செல்வாக்கு குறைவு, முயற்சி தாமதம், திடீர் நன்மை, பிரயாணம்.

**கடகம்**

எடுத்த காரியம் கைகூடும், புதிய விடயம், மன மகிழ்ச்சி, அதிகவருமானம்.

**சிங்கம**

தொழிலில் முன்னேற்றம், உற்சாகம், பாராட்டு, அதிகாரம்.

**கன்னி**

சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, தேசாந்திர வாசம், முயற்சிதாமதம்.

**துலாம்**

எதிர்பாராத பிரச்சினை, தொழில் கஷ்டம், காரிய தடங்கல், வாகன பயம்.

**விருச்சிகம்**

களஸ்திர நன்மை, உறவினர் உதவி, அதிகாரம், பெருமையடைதல்.

**தனுசு**

ஜனவசியம், நோய் குணமடைதல், காரிய சித்தி, தொழில் சிந்தை.

**மகரம்**

சொத்துப் பிணக்கு, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், பணக்குறைவு.

**கும்பம**

புதிய விடயம், மேன்மை, சொத்துக்களால் நன்மை, முயற்சி தாமதம்.

**மீனம்**

அன்னியர் சந்திப்பு, விருந்துபசாரம், எடுத்த காரியம் கைகூடும், தனவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வடபகுதி வாக்காளர் அட்டைகள் விமான மூலம் எடுத்து வரப்படும்

(கொழும்பு)

வடபகுதிக்கான வாக்காளர் அட்டைகள் விமான மூலமாகவே அனுப்பி வைக்கப்படும் என தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புக் கருதியே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, ஏனைய மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகள் மூலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளன.

உத்தியோக பூர்வமாக வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் நடைமுறை எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 25 ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி பூர்த்தி அடைந்து விடும் என்று தபால் மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார். (உ-60,10)

## சவுக்க மரங்கள் தறிப்பது குறித்து அரச அதிபரிடம் புகார்

(மருதங்கேணி)

குடத்தனை மணற்காட்டுப் பகுதியில் சவுக்க மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவதைத் தடை செய்யுமாறு வடமராட்சி கிழக்கு வளம் பேணல் சங்கம் யாழ். அரசாங்க அதிபரை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

குடத்தனை மணற்காட்டுப் பகுதியில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கோடு வளர்க்கப்பட்ட சவுக்க மரங்கள் தினமும் வெளியிடங்களிலிருந்து வரும் விறகு வியாபாரிகளால் தறித்து துண்டுகளாக்கிக் கொண்டு செல்லப்படுகின்றன.

இதனால், இப்பகுதிச் சவுக்க மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

ஏற்கனவே தாங்கள் குடத்தனைப் பகுதியில் நடாத்திய கலந்துரையாடலின் போது இவ்விடயம் சம்பந்தமாக எடுத்துக் கூறியிருந்தோம். இதைத் தடுப்பதற்கு சட்டநடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தீர்கள் இருந்த போதும், இதுவரையும் தடை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் எங்கள் சங்கம் இவ் வளத்தைப் பேணுவதற்கு 30 ஏக்கர் நிலத்தில் சவுக்கக் கன்றுகளை நாட்டிப் பராமரித்து வருகின்றது. ஆயினும், தினமும் பாரிய சவுக்க மரங்கள் அழிக்கப்பட்டு வருவதினால், தொடர்ந்தும் சவுக்க மரங்கள் நடுகையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தயவு செய்து இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு சவுக்க மரங்கள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு பணிவாக வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-35)

**யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு**

## வணிகமாணி இறுதித் தேர்வில் 20 பேர் சித்தியெய்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2001ஆம் கல்வியாண்டில் வணிகமாணி இறுதித் தேர்வுக்குத் தோற்றிய வெளிவாரிப்பிரிவு மாணவர்கள் 20 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:

வி.தயாளினி, திருமதி அ.துஷ்யந்தி, நா.அகிலன், ப.அங்கயற்செல்வி, ந.தமயந்தி, ந.ஜெகன், இ.இராமகிருஷ்ணா, க.சிவகுமார், த.துஷ்யந்தினி, சி.வேர்ஜினியா, த.யோகேஸ்வரன், கி.ஜெயசீலன், பா.ஜெயரூபன், நே.பிரதீபன், இ.ராம்ரஜீவன், சோ.தவநாதராஜா, ந.துளசினி, ஆ.கௌசல்யா, சே.கல்யாணி, திருமதி. லி.மீரா. (உ-19)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 3. தேசவழமையும்

59

### புத்தளம், கற்பட்டித் தமிழர் வழமைகளும்

இவ்விடத்திலே ஒரு வழமை நடந்து வருகிறது. அனேகம் பேர்கள் தங்கள் காணிகளை மூன்று, அஞ்சு, எட்டு, பத்து வருஷமளவாக அறுதி குறித்து ஒற்றியாக வைப்பார்கள். ஆனால் மறுபடியும் அந்த ஒற்றிக்காரன் அந்தக் குறித்த அறுதி செல்ல முன்னம் அவசரமாகத் தனக்குண்டான கடன் இறக்குவதற்காகவென்கிலும் மறுவிதங்களாகவென்கிலும் அந்த ஒற்றிக் காணிய்ய விற்க வேணுமென்று வந்து சம்பவித்ததேயுண்டானால் அப்போது அந்தக் காணி ஒற்றிக்கொண்டவன் தேசவழமைப்படிக்குத் தவிர்க்கவொண்ணாது அதற்குச் சம்மதியாய்த் தான் கொடுத்த ஒற்றி முதலும் பற்றிக் கொள்ளவேணும்.

நாலாம் பகுதியிலே சொல்லியிருக்கிற வழமைகள் இவ்விடத்திற்குத் தேவையில்லை.

**அஞ்சாம் அற்த்திக்கல் கூலிக்குப் பிடிக்கிற வகை இவ்விடத்து வழமைக் கடுத்த பகுதி**

யாதாமொருதர் பொன் வெள்ளியினாலே உண்டாக்கப்பட்ட ஆபரணாதிகளை அடைவாக வைத்து மாதமொன்றுக்கு வட்டி தருவோம் என்று பொருந்திச் சில பணங்கள் கடன் வாங்கியிருந்ததேயுண்டானால், அந்த அடைவு பிடித்தவன், அந்த ஆபரணாதிகளை அணிந்திருந்தான் என்று அல்லது மறுபேர்கள் அணித்திருக்கக் கொடுத்திருந்ததென்று அடைவுக்குடையவன் ஒப்பனை பண்ணினானாகில், அப்போது அந்தப் பணத்துக்கு வட்டி இறுக்குகிறதில்லை. அந்த அடைவு பிடித்தவன் ஆபரணாதிகளையும் மறுபடி ஒப்புக்கொடுத்துத் தன்னுடைய முதலாம் படியே பற்றிக் கொள்ளவேணும்.

ஒருதன் தன்னுடைய எருதொன்றைக் கடனாக மறுபேருடைய பணிவிடைக்குத் தன் மனசு பொருந்திக் கொடுத்தானாகில், அந்த எருது கால் முறிந்தாலும் செத்துவிட்டாலும் அப்போது அந்த உடையவன் அந்த மாடு கடன் வேண்டினவன் இடமாகத் தேசவழமை யாதொரு விலை செலவு கேட்கப்படாது. ஒரு கை பிழைபாடாக வந்து சம்பவித்ததென்று கண்டு மனசு பொறுத்து விடவேண்டியது.

அஞ்சாம் பகுதியிலே சொல்லியிருக்கிற மற்றும் வழமைகள் இவ்விடத்துக்குத் தேவையில்லை.

**ஆறாம் அற்த்திக்கல் கொள்வனவு விற்பனவு இவ்விடத்து வழமைக் கடுத்த பகுதி**

யாதாமொருதர் எருது மாடு, கிடாமாடு, ஆடு முதலானதுகள் விற்கவேணுமென்கில் இதுகளெல்லாம் நறுக்குச் சீட்டு எழுதிப் பிரசிதம் பண்ணிக் கொள்ளுகிறதில்லை. இந்த விலை தீர்மானப்படுத்துகிறது எப்படி என்றால் அந்த மிருகங்கள் விற்கப்பட்டவரை, அந்த மிருகத்தின் எருவை எடுத்துக் கொள்கிறவன் கையிலே கொடுத்து எருமாற்றிக் கொண்டால் அப்போது அந்த மிருகங்கள் விற்றுவிட்டதாய்க்கண்டு கொள்ளுகிறது. அந்த மிருகங்கள் ஒப்புக்கொடுக்கச் சிறிது முன்னம் ஈன்றதானாலும் கொண்டவன் அந்த மிருகங்களுக்கு விலை இன்னதென்று பொருந்தி எரு வாங்கிக்கொண்டான் என்று விற்றவன் ஒப்பனை பண்ணினதேயுண்டானால் அந்தக் கொள்விலை திடப்படும். அந்த மாடுகளில் உண்டான செத்தல்களும் நலிவுகளும் கொண்டவன் மறு வழக்குச் சொல்லாமல் கையேற்கப்படும்.

மற்றும் ஆறாம் பகுதியிற் சொல்லியிருக்கின்ற வழமைகள் இவ்விடத்துக்குத் தேவையில்லை

**ஏழாம் அற்த்திக்கல் ஆண்சிறை, பெண்சிறை**

ஆண் சிறை, பெண் சிறை வகை ஏழாம் பகுதியில் இருக்கிறது. இவ்விடத்துக்கு யாதொன்றுந் தேவையில்லை.

**எட்டாம் அற்த்திக்கல் வட்டிக்குப் பணங் கொடுக்கிறவகை இவ்விடத்து வழமைக்கடுத்த பகுதி**

யாதாமொருதர் இப்போ நடந்து வருகிற வழமைப்படிக்கு ஒரு திகதி குறித்து, அந்தத் திகதிக்குள்ளாக வட்டியும் முதலும் தரும்படி பொருந்திச் சில பணங்களைக் கடன் கொடுத்த இடத்திலே, அந்த அவதி தப்பினதே உண்டானால் அப்போது அந்தக் கடன் கொடுத்தவன் தான் கொடுத்த பணத்துக்கு ஈடாக அடைவு எழுதியிருக்கிற காணிகளிலே என்கிலும் அதற்கு அடுத்ததுகளிலே என்கிலும் தன்னுடைய பணம் பெறவேணும். அதற்கு அந்தக் கடன்காரர் தடை பண்ணினதேயுண்டானால் அப்போது கடன் கொடுத்தவன் இராச்சிய பாரம் நடப்பிக்கிறவர்கள் இடமாக முறைப்பாடு பண்ணி அந்த விதத்திலே, அவனை ஞாயத்தினாலே வசப்படுத்தும படிக்குக் கேட்கலாம். இந்த விதமாகக் கடன் கொடுக்கிறதுகளிலே பிணைக்காரர் உடன்பாடாயிருந்தால் , அந்தக் கடன்காரன் ஒழித்துவிட்டாலும், அவன் வாங்கின பணம் இறுகுறதற்கு தகுதியில்லாதே வறுமையாய் விட்டாலும் அப்போது அந்தக் கடன் கொடுத் தவன் அந்தப் பிணைக்காறரைப் பிடித்துத் தன்னுடைய முதல் பெற்றுக்கொள்ளும் படிக்கு வகைதேடலாம்.

அந்தப் பிணைக்காறரும் தாங்கள் பிணை நின்ற பணம் உத்தரிக்கவும் கடனாளியாய் இருக்கிறார்கள். அந்தக் கடன்காறனுக்கு யாதொரு ஆஸ்த்தி உண்டாய் வந்த காலங்களில் இந்தப் பிணை நின்ற பேர்கள் தாங்கள் இந்தப் பணம் பெற்றுக் கொள்ளுகிறதிற்கு அந்த நீதி எப்போதும் திடப்பட்டிருக்கிறது.

இரண்டு பேர் கூடிக்கொண்டு ஒருத்தர் இடமாகச் சிலர் பணங்களைக் கடன் வாங்கித் தாங்களிரண்டு பேரும் பொதுவாகவும் சரிசமனான கடன்காறராகவும் கடன் அறவு பண்ணும் வேளையில், இரண்டு பேரையும் அழைக்கத் தேவையில்லாத விதத்துக்கு எழுதிக் கொடுக்கிறது. அப்படிப்பட்ட எழுத்துக்களிலே, முன்னின்றார் முன்னிறுக்க கடவராக வென்று கடன் கொடுத்தவன் எழுதுவிக்க வேணும். அப்போ, தன்னுடைய பணம் வேண்டிய போது, இவர்கள் இரண்டு பேரில் எவன் முன்னே வருவானோ அவன் முழுதும் இறுக்க வேண்டியவனாய் இருப்பான். அதிலும் இப்படி முழுதும் இறுக்கிறவன் தன்னுடைய கூட்டாளியைக் கண்ட இடங்களிலே அவன் பேரிற் தனக்குண்டான நீதியைத் தேடிக் கொள்ளலாம் என்ற உடன்படிக்கையும் உண்டாயிருக்கவேண்டும்.

ஒரு புருஷனாய் இருக்கப்பட்டவன், உயிருடனே இருக்கும் காலத்திலே தனது பெண்சாதி பிள்ளைகளை அறியாமற் சில கடன் வாங்கி, அந்தக் கடன் இறுக்க முன்னே, செத்துவிட்டானாகில், அப்போது அவனுடைய பெண் சாதியும் பிள்ளைகளும், உறுதியான ஒப்பனை கண்ட படிக்கு அந்தக் கடனை உத்தரிக்கவும் வேண்டியது.

யாதொருதர் வட்டிக்குப் பணங் கொடுத்ததேயுண்டானால், அந்த வட்டியிற் பணம் அறுதிக்கு வாங்கி விடாமல் நாட்படவிட்டிருந்தும், அந்த வட்டியிற் பணம் முதலுக்கு அதிகப்பட்டது என்றால், அப்போது அந்தக் கடன்காறன் முதலுக்குச் சரியாக் வட்டி கூட்டி இறுக்கிறது. அல்லாமல் கடன் கொடுத்தவனுக்கு அதிகங் கொடுக்கிறதில்லை.

யாதொருதர் நெல் வட்டிக்கு கொடுத்தார்களேயானால், வெள்ளாண்மை இல்லாத மாசத்துக்கு அந்த நெல் வட்டியின் புரோசனம் இழந்து விடுவார்கள். நல்ல வெள்ளாண்மை இல்லாத வருஷத்திலும் அந்த விளைவு மதித்த மதிப்புக்குத் தக்க நெல் வட்டிக்குக் கொடுப்பார்கள். யாதாமொருதருக்கு நெல்லு வேண்டியதாய் இருந்தால், விதைக்கிறதற்கு என்கிலும் மறு பண்ணிவிடைக்கு என்கிலும் ஒருதரிடமாக நெல் வட்டிக்கு வாங்கினதே உண்டானால், அப்போது அந்த நெல்லு வாங்குகிற பேர்கள் இயன்ற மாத்திரம் ஒரு நல்ல பொருந்து பண்ணிக் கொள் வேண்டியது.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## மோசடி புரிந்தவர் தாக்குதலுக்கு ஆளானார்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் வட்டார மக்களுக்குச் சொந்தமான காணிகளை மோசடியாக விற்றுவந்தவர் எனக் கருதப்படும் நபர், ஆத்திரமுற்ற ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முஸ்லிம் வரட்டாரத்தைச் சேர்ந்த தம்ஜூன் (வயது 26) என்பவரே இவ்விதம் படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை, இவரைத் தாக்கிக் காயப்படுத்தியவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ-4)

## நிர்வாகிகள் தெரிவு

(பாசையூர்)

வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்புக்களுக்கான நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு எதிர்வரும் மார்ச மாதம் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (உ-72)

## ச.ச.நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்புவிழாவில் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈழமாறன், பிரதேச சபைச் செயலாளர் கே.கணேசலிங்கம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையம் யுத்த அனர்த்தங்களால் சேதமாக்கப்பட்டு புனரமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## திருநிலைப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்டத்தைச் சோந்த அருட் சகோதரர்களான ரி.என். ஜிப்றவுண் ஏ-பி திருமகன் , தே.செல்வரட்ணம், ஜே.அன்ரன் அருள்தாசன், இ.பெ.தயாபரன், அன்ரன் யோசப், தி.ப.ச ஜே.ஜே. பேணாட், அ.மதி ஆகியோர் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி யாழ். ஆஜர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் யாழ். புனித மரியாள் பேராலயத்தில் குருக்களாக திருநிலைப் படுத்தவுள்ளனர். (உ)

## இடமாற்றம்

(பொன்னாலை)

கடந்த மூன்று வருட காலமாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வந்த டாக்டர் கே.கணேஸ்வரராசா இம் மாதம் 25 ஆம் திகதி முதல் கொழும்பு அரசினர் தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுகாதார வைத்திய சேவைகளை மேம்படுத்துவதற்காக சிறந்த சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் இவருக்கு, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நலன்புரிச் சங்கம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிரிவுபசார விழா ஒன்றினை நடாத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-49)

## பரிசளிப்பு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக் கழகங்களின சமாசத்தின் 22ஆவது ஆண்டு நிறைவையொட்டி புன்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து நடாத்தும் பரிசளிப்பு- பாராட்டு விழா நாளை காலை 9.00மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## தொழிற் பயிற்சி விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதிநேர தொழிற் பயிற்சிகளைத் தொடர்வதற்காக அனுமதி பெற்றோருக்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இவ் விரிவுரைகளில் அனுமதி பெற்ற மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை, விடுமுறையில் சென்ற 2ஆம் 3ஆம் ஆண்டுகளில் பயிலும் பகுதி நேரக் கற்கைகளைத் தொடரும் மாணவர்களுக்குரிய விரிவுரைகளும் அன்றைய தினமே ஆரம்பிக்கும் எனவும் கல்லூரி அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (உ-19)

## மானாவாரிப் பயிர்ச்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் போதியளவு மழை கிடைக்காமையால் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக 50 வீதமான மானாவாரிப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நிலவும் வரட்சி காரணமாக மிளகாய்க் கன்றுகளில் குருமன் நோய் ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதுடன், வெங்காயப் பயிரில் நுனி கருகல் நோயும் பரவி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (உ-19)

## அகில இலங்கை சைவ மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபை நடததும் அகில இலங்கைச் சைவ மாநாடு எதிர்வரும் 5,6,7ஆம் திகதிகளில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூன்று தினங்களும் காலை, மாலை இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ள இந்த மாநாட்டில் சைவ அபிமானிகள், துறைசார் அறிஞர்கள் ஆகியோர் கலந்து கொணடு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பினால் சாவகச்சேரி மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இன்று காலை சாவகச்சேரி நகரில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி, மனிதநேய அமைப்பின் பிரமுகர் எஸ்.பகீரதன் ஆகியோர் பங்கு கொண்டு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு உரைகளையும் விளக்கங்களையும் வழங்கவுள்ளனர்.

அண்மைக்காலமாக தென்மராட்சிப் பகுதியில் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான அதிகார துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்தவும் இது விடயத்தில் சமூக விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவுமே இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-16)

## முதலீட்டாளர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

பிரான்ஸின் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களைக் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது.

ஃப்ராங்கோ ஸ்ரீலங்கா வர்த்தக மன்றத்தின் ஏற்பாட்டில் இங்கு வரவுள்ள இம் முதலீட்டாளர்கள் குழு அரச மற்றும் தனியார் கைத்தொழிலில் பேட்டைகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (உ-8)

# ஆறு நாடுகளின் பேச்சுவார்த்தை
# மூன்று நாட்களில் வெற்றியில் முடிவு

(டோக்கியோ)

தென் கொரியாவின் அணுவாயுதம் தொடர்பாக நடைபெற்று வந்த ஆறு தரப்புப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாக ஜப்பானிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணுவாயுதம் தொடர்பாக 3 நாட்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இறுதித் தீர்வு ஒன்றுக்குத் தாம் வந்துள்ளதாகவும் இது பேச்சுவார்த்தையின் முக்கிய வெற்றி என்று அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தையின் வெற்றி இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த உதவும் முன்னோடி என்று ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக நடைபெற்ற பேச்சுவார்த்தை 3 நாட்களுக்குள் சாதகமான முடிவுகளை எட்டியிருப்பது வரவேற்கத்தக்கது என்றும், பேச்சுவார்த்தையில் பங்கு பற்றிய அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள் என்றும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

எனினும் இன்று மாலை ஆறு நாடுகள் சேர்ந்த இராஜதந்திரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடகொரியா, தென்கொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய 6 நாடுகளும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு கடந்த 6 மாதங்களாக திட்டமிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (து-2)



ஹெயிட்டியின் தலைநகரைக் கைப்பற்ற நெருங்கிவரும் தீவிரவாதிகளை தடுத்துநிறுத்தும் நோக்குடன் தலைநகரமெங்கும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# பிலிப்பைன்ஸ் கப்பல் விபத்தில் 600 பயணிகள் உயிருடன் மீட்பு

பிலிப்பைன்ஸில் விபத்துக்குள்ளாகித் தொடர்ந்தும் எரிந்தகொண்டிருக்கும் கப்பலில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட பயணிகள் உயிருடன் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

877 பயணிகள் செல்லக்கூடிய இந்தக் கப்பலில் ஆயிரத்து 126 பயணிகள் பயணித்ததாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தகவலின்படி 153 பேர் காணாமல்போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் மீட்புக் கப்பல்கள் பல ஈடுபட்டுள்ளதாகவும் பிலிப்பைன்ஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

கப்பலின் சமையல் அறையில் ஏற்பட்ட தீயே கப்பல் முழுவதும் பரவியதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், கப்பலின் பிரதான எஞ்சினில் ஏற்பட்ட தீயே இதற்குக் காரணம் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (து-2)

## மூத்த காங்கிரஸ் தலைவர் சவாண் காலமானார்

(மும்பை)

மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான எஸ்.பி.சவாண் நேற்று முன்தினம் மும்பை மருந்துவமனையொன்றில் மரணமடைந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 86.

உடல் நலக்குறைவு காரணமாகத் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்தார். (து)

# அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் 33 தொகுதிக்ளில் 31 புதிய முகங்கள்

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் நேற்று முன்தினம் சென்னையில் வெளியிடப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதா வெளியிட்ட இந்தப் பட்டியலில் சி.ரி.பி.தினகரன், எஸ்.முருகேசன் தவிர கலைக்கப்பட்ட பதின்மூன்றாவது மக்களவையில் அ.தி.மு.க. சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்த உறுப்பினர் எவரும் நியமிக்கப்படவில்லை.

சி.ரி.பி. தினகரன் பெரிய குளம் தொகுதியிலும், எஸ். முருகேசன் தென்காசி (தனி) தொகுதியிலும் மீண்டும் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். (து)

# பிரி.படைகளை ஈராக்கிற்கு அனுப்பியதில் ரொனி பிளேயர் மீது மக்கள் அதிருப்தி

பிரித்தானியப் படைகளை ஈராக்கிற்கு அனுப்பியது தொடர்பாக இணையத்தள வழியில் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பு பிரதமர் ரொனி பிளேயர் மக்களின் அதிருப்திக்குள்ளாகி இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக் கருத்துக்கணிப்பின்படி ஆளும் தொழில்கட்சிக்கு ஆதரவாக 34 வீதமான வாக்குகளும் எதிர்க்கட்சியான பழைமைபேணும் கட்சிக்கு 39வீதமான வாக்குகளும் கிடைத்திருக்கின்றது.

எனினும், 28 வீதமான மக்கள் பிரதமர் ரொனி பிளேயர் ஆட்சியை மதிப்பதாகவும், அவர் பழைமை பேணும் கட்சித் தலைவர் மைக்கல் போவேட்டை விடச் சிறந்தவர் என்றும் தெரிவித்ததுடன், ஆட்சிமாற்றத்தை விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

எனினும், வாக்களித்தோரில் 60 வீதமானவர்கள் ஈராக்கிற்கு பிரித்தானியப் படைகளை அனுப்பியமை தொடர்பாக அதிருப்தியை வெளியிட்டிருப்பதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (து-2)



பூமியின் பாரத்தை ஹெர்குலிஸ் சுமப்பதாக கிரேக்க கதை. ஆனால் சீனாவின் குவாங்ஷு நகரப் பெண்ணோ மலைக்கவைக்கும் அளவுக்கு குப்பையின் பாரத்துடன் சைக்கிளில் அனாயசமாகச் செல்கிறார்.

# ஈராக்கில் தேடுதல் வேட்டையில் முக்கிய புள்ளி ஒருவர் சுட்டுக் கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது நடைபெற்ற துப்பாக்கித் தாக்குதலில் அல்கெய்டாவின் முக்கிய புள்ளியொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜோர்தானிய அமெரிக்க தூதரைக் கொலை செய்ய முயன்ற அல்கெய்டா உறுப்பினரான அபூ முஸாப் அல்-ஸர்கலியின் ஆதரவாளரும் உதவியாளருமான அபூ முஹம்மத் ஹம்ஸா என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

ஈராக்கின் ஹப்பானியா நகரத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையின் போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சதாம் ஹுசைனின் நெருங்கிய ஆதரவாளர் என்று அமெரிக்கா கூறுகின்றது.

சுட்டுக்கொல்லப்பட்ட ஹம்ஸாவின் வீட்டை அமெரிக்கப் படைகள் சோதனையிட்டதில் குண்டு தயாரிக்கும் பொருட்கள், தற்கொலைக் குண்டுதாரி அணியும் குண்டுகளுடன் கூடிய மேலாடை, போலிக் கடவுச்சீட்டுக்கள் முதலியவற்றைக் கண்டெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹம்ஸாவின் கொலையையடுத்து கைது செய்யப்பட்டவர்களினது விசாரணையின் போது பின்லேடன் மறைந்திருக்குமிடம் தெரியவருமென்று அமெரிக்கப்படைத்தளபதி தெரிவித்துள்ளார். (து)

WORLD NEWS உலக தரிசனம்

# திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது

(சென்னை)

மக்களவைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி தமிழகம் முழுவதும் திருத்தப்பட்ட புதிய வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி அலுவலகம் மற்றும் மாநகராட்சி மணடல அலுவலகங்களின் அறிவிப்புப் பலகையில் வாக்களார் பட்டியல் ஒட்டப்பட்டுள்ளது.

மாநிலத்தின் சில பகுதிகளில் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் அந்தந்த மக்களவைத் தொகுதியிலுள்ள தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலும் மாநகராட்சி, நகராட்சி அலுவலகங்களிலும்வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியலில் திருத்தம் ஏதுமிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் தேர்தல் அதிகாரிக்கு அதற்கான படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும் எனத் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (து)

# தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி எல்.ரி.ரி.ஈ. ஆதரவுக்கூட்டணி

## சுப்பிரமணியசுவாமி கண்டுபிடிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி எல்.ரி.ரி.ஈ. ஆதரவுக் கூட்டணி என்று தமிழ்நாடு ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் 1977 ஆம் ஆண்டு உருவான ஜனதாக் கட்சியின் பல்வேறு பிரிவுகளும் தங்கள் வேற்றுமைகளை மறந்து தேசிய அளவில் புதிய அணியாக உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (து)



அசாம் மாநிலம், குவாஹாட்டியில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தகப் பொருள்காட்சியில், பாகிஸ்தானியரின் கடையில் விற்கப்படும் உப்புப் படிக விளக்குகள். ஆஸ்துமா, நுரையீரல் அழற்சி போன்ற நோய்களைக் குணமாக்கக் கூடியது என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

# தேர்தல் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுமென தேர்தல் ஆணையர் அறிவிப்பு

(சென்னை)

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் ஒரே நாளில் வாக்குப்பதிவு நடைபெறக்கூடுமென்று மத்திய தேர்தல்ஆணையர் கூறியிருக்கிறார்.

தமிழ் நாடு, பாண்டிச்சேரியில் கடந்த நான்கு நாட்களாகத் தேர்தல் ஏற்பாடுகளைப் பார்வையிட்ட அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மாநிலத்தில் எந்த அரசியற் கட்சியும் அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தாதவாறு தேர்தல் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்றும், தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுமென்றும் உறுதியளித்தார்.

பதற்றம் ஏற்படக் கூடிய பகுதிகளில் காவல்துறைக்கு உதவியளிக்க துணை இராணுவப்படையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கிணங்க கூடுதலாகத் தேர்தல் பார்வையாளர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும், தேர்தலின் போது முறைகேடுகள் நடைபெற்றால் அவர்கள் அதுபற்றித் தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலர் திருமாவளவன் இராஜினாமாச் செய்ததால் காலி [illegible] கும் மக்களவைத் தேர்தலுடன் தேர்தல் நடைபெறுமென்றும் அவர் கூறினார்.

முன்னதாக அவர் மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து சென்னைத் தலைமைச் செயலகத்தில் தேர்தல் ஆணையர் பி.வி. ஸான்டஸ், மாநிலத் தேர்தல் அதிகாரி, மற்றும் தொகுதித் தேர்தல் அதிகாரிகளுடன் மேல்மட்ட ஆலோசனை நடத்தினார்.

தேர்தல் ஆணைய ஆலோசகர் கே.வி.ராவ் மாநில தேர்தல் அதிகாரி சாரங்கி மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், தொகுதித் தேர்தல் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். (து)

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. -குறள்

வலம்புரி

## தமிழ் மக்களுக்கு தரப்படும் உத்தரவாதம் என்ன?

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அரசியல்வாதிகளும் தேர்தல் காலங்களில் இறைவனை நினைப்பவர்கள் என்பதை உறுதிப் படுத்துவதாக பொ.ஐ.மு. தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா, ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கா, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் ஆலயங்களுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் பங்கு பற்றிவிட்டு, தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முன்னதாக பௌத்த பீடாதிபதிகளிடமும் அவர்கள் ஆசி பெற்றுள்ளனர். இவையெல்லாம் இறைவனையே ஏமாற்றும் வித்தை என்பதை இறைவனே அறிவான். ஏதோ களவெடுக்கப் போகின்றவனும் கடவுளிடம் மன்றாடிவிட்டுத் தானே செல்கின்றான். அவ்வகையில் தேர்தலில் போட்டியிடப் போகின்றவர்கள் எவ்வளவுதான் உருட்டுப் புரட்டுக்களை - ஏமாற்றங்களை - மோசடிகளைச் செய்யப்போகின்ற போதிலும் இறைவனை மன்றாடிவிட்டுச் செல்கின்றனரெனில், அவர்களிடமும் இறைநம்பிக்கை சந்தர்ப்ப சூழ்நிலையிலாவது ஏற்படுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

எதுவாயினும் பூசை வழிபாடுகள், ஆசியலங்காரங்கள் என்பவற்றோடு தேர்தல் பிரசாரங்கள் களமிறக்கப்பட்டுள்ளது. வழமையில் வேட்பாளர்களின் வர்ணஜால வார்த்தைகளில் மக்கள் மயங்கி தமது வாக்குகளை அளிப்பதும், தேர்தலில் வென்றதும் வாக்களித்தவர்களை வேட்பாளர்கள் அடியோடு மறந்து போவதும் இலங்கையில் நடைபெறும் சர்வசாதாரண நிகழ்வாகும்.

இதில் வேடிக்கை என்னவெனில், வேட்பாளர்கள் வாக்காளர்களைத்தான் மறந்து போகின்றார்கள் எனில் மறப்போம், மன்னிப்போமென்றாவது விட்டுவிடலாம். ஆனால் அவர்கள் தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளையே மறந்து போகின்றார்கள் எனில் என்ன செய்ய முடியும்?

ஒரு இறாத்தல் பாணை 3 ரூபாவிற்கு வழங்குவோம் என்று கூறிய வாக்குறுதி மூன்று மாதங்கள் கூட நிலைக்காத நிலையில், படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பென்ற வாக்குறுதி அரங்கேறவா போகிறது? எல்லாம் பொய்யும் புளுகுமாகத் தேர்தல் பிரசாரங்கள் முழங்குகின்றன. அறியாமையில் மக்கள் உழலும்வரை இத்தகைய பொய்யுரைகளும், புளுகுரைகளும் வேட்பாளர்களின் சொத்துரிமையாக இருக்கப் போவது உறுதி.

இதில் விழிப்பும், விளக்கமும் வாக்காளப் பெருமக்களுக்கே இருக்க வேண்டும். இவை வழமையில் கூறப்படும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற அறிவுரைகளாகும்.

ஆனால் எதிர்வரும் தேர்தலில் மக்கள் எதிர்பார்க்கின்ற ஓர் முக்கியமான விடயம் உண்டு. அதாவது ஆட்சியைக் கைப்பற்றுவதில் முண்டியடித்துக்கொள்ளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் இனப்பிரச்சினை விடயத்தில் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் சமாதான முயற்சிகளைத் தொடருவோம் எனக் கூறிக்கொள்வது மட்டும்; நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இக்கட்சி முன்வைத்திருக்கின்ற திட்டங்கள் என்ன என்பதே கேள்விக்குரியதாகும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கேட்கும் ஐக்கிய தேசிய முன்னணி விடுதலைப் புலிகளால் முன்வைத்த இடைக்கால சபைக்கான நிர்வாகத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துமா? அவ்வாறு அதனை ஏற்றுக்கொள்வதாயின் அது பற்றி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அதேவேளை நாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தைத் தொடருவோமெனக் கூறும் ஜனாதிபதி தலைமையிலான கட்சி, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தன்வசம் வைத்துள்ள திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். இவற்றை மறைத்துக்கொண்டு வாக்குக் கேட்பது மீண்டுமொரு யுத்தத்திற்கே வழி வகுப்பதாக இருக்கும்.

# தேர்தலை யாழ். மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலை யாழ். மாவட்ட மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சி பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் தேர்தல் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டைத தெளிவுபடுத்தும் வகையில் கட்சியின் செயலகத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கருத்தித் தெரிவித்தபோது, ஜனநாயகக் கட்சி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது. கட்சியின் சார்பாக செயலாளர் சி.க.செந்தில்வேல் மற்றும் எஸ். கதிர்காமநாதன், கே.தணிகாசலம் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அங்கு மேலும் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு:-

நாட்டின் தேர்தல் நடத்தப்படுவது அந்த நாட்டு மக்கள் தமக்குரிய சிறந்த தலைமையைத் தேர்ந்தெடுப்புதற்காகவே ஆனால், தற்போது நடைபெறவுள்ள தேர்தல் ஜனாதிபதி தன் நிறைவேற்று அதிகாரத்தையும், பாராளுமன்ற அதிகாரத்தையும் ஒருங்கே பெறவேண்டும் என்பதற்காக நடத்தும் அதிகார மோசடியாகும். இதனால், இத்தேர்தலை யாழ். மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்.

வரப்போகின்ற தேர்தல் பேரினவாதக் கட்சிகளைப் பலப்படுத்துகின்ற களம். இதன்மூலம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வோ அல்லது பொருளாதார முன்னேற்றமோ ஏற்படமாட்டாது.

தற்பொழுது மக்களுக்குள்ள பிரச்சினை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கும் இதற்குத் தீவு காணும வகையில் கடந்த இரண்டு வருடமாகத் தொடரப்பட்ட சமாதான முயற்சிகளும் ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற இனவாதிகளின் கூச்சலினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் கட்சிகள் தாம் அதிகாரத்துக்கு வருவதற்காகவே தேர்தலை எதிர்கொள்கின்றனர்.

இநத நிலையில் பொருத்தமற்ற காலத்தில் தேர்தல நடத்தப்பட இருப்பதாலும் பேரினவாதிகள் தமது அதிகாரப் பாதுகாப்பிற்கு தேர்தலைப் பயன்படுத்துவதாலும் எதிர்வரும் தேர்தலை யாழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் புதிய ஜனநாயகக கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. (இ-4,43)

## முருங்கைக்காய் விற்கச் சென்ற குடும்பஸ்தரைக் காணவில்லை

### மனைவி ம.உ.ஆ.கு. இல் முறைப்பாடு

இளம்குடும்பஸ்தர் ஒருவரைக் காணவல்லை என அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நோதலை இளவாலையைச் சேர்ந்த ஆறுமாதக் குழந்தையின் தந்தையான 23 வயதுடைய சந் திரசேகரம் கமலசுதன என்பவரே கடந்த 17ஆம் திகதிமுதல் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் இவரது மணைவி க.சிவனேஸ்வரி நேற்றுச் செய்துள்ள முறைப்பாட்டில்,

எனது குழந்தையை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது கணவரால் எழுதபபட்ட கடிதம் ஒன்று காணப் பட்டது.

அதில், யாழ்ப்பாணத்தில முருங் கைக்காய் விற்றுவிட்டு பிற்பகல் 2.00 மணியளவில் வீடுவந்து சேர்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும், இற்றைவரை என் கணவர் வீடுவந்து சேரவில்லை.

இதேவேளை, கடந்த 18ஆம் திகதியன்று திருக்கேதீஸ்வரத்தில் கண்டதாகத் தெரிந்தவர் ஒருவர் என்னிடம் கூறினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-19)

## காணி கையளிப்பு

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு சென்னையில் வசிக்கும் கருணாகரன் தம்பதியினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியை சுகாதார அமைச்சிற்குக் கையளிக்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவமும் வைத்தியசாலைக்கு அதியுயர் வலுவுடைய தனி மின்சார இணைப்பு வழங்கும் வைபவமும் வல்லைப்பிரதேசத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களைக கௌரவிக்கும் விழாவும் இடம்பெறுகின்றன.

நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ தண்டபாணி தேசிகரும் சுவாமி சித்ருபானந்தாவும். நிகழ்த்தவுள்ளனர். (உ-52)

### தினசரி தியானம்

### விவேகச்சிந்தனைகள்

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை இரும்பைப் போன்ற தசைகளும், எஃவைப் போன்ற நரம்புகளும் தான். சுய வலிமைபெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள். உங்களுக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும உங்களுக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்.

*மாகாணசபைத் தேர்தலுக்கான*

## வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம்

(கொழும்பு)

கலைக்கப்பட்ட வடகீழ் மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நேற்று முதல் மார்ச்மாதம் 5ஆம் திகதிவரை தாக்கல்செய்யப்படவுள்ளன.

வடகீழ் மாகாணத்தில் புத்தளம், குருநாகல் ஆகிய இரு மாவட்டங்களும் அடங்குகின்றன. 50 மாகாணசபை உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தல் நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படுமென உதவித்தேர்தல் ஆணையாளர் ரி.சேனனாயக்கா தெரிவித்துள்ளார். (ம)

## மூலதன அபிவிருத்தி நிதி மட்டுப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண உளளூராட்சி சபைகளுக்கு வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் மூலதன அபிவிருத்தி நிதியை 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இவ்வருடம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதியை மட்டுப்படுத்தி இருப்பதால் உளளூராட்சி சபைகள் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியிருப்பதாக உள்ளூராட்சி சபைகளின் உதவி ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2003ஆம் ஆண்டுக்கு முன்னர் மூலதன அபிவிருத்தி நிதியாக 10 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுவந்த நிலையில கடந்த வருடம் இந் நிதி 5 இலட்சம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததும் இவ்வருடம் மேலும் அரைப்பங்காக மட்டுப்படுததப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

*தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த*

## பொலிஸாருடன் இணைந்து படையினர் பணியாற்றுவர்

(இறாகம)

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருடன் இணைந்து இராணுவமும் கடமையாற்றும் எனப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல்மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இது வன்முறைகள் நிறைந்த ஒன்றாகவே எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் நேற்று முதல் நாட்டின் சகல இடங்களிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்தே நடவடிக்கையில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டுப்படையினர் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களையும் அதனால் ஏற்படும் கலகங்களையும் அடக்குவதுடன் சூத்திரதாரிகளை உடனுக்குடன் கைதுசெய்யும் நடவடிக்கையிலும் ஈடுபடவுள்ளனர். (உ-61,4)

## தவக்கால சிந்தனை-04

அமலி என்ற பெண் ஏழைகள், எளியவர்கள் மீது அக்கறை உள்ளவர். அவர்களது தேவையை அறிந்து உதவுபவர். அவர்களது பிறந்தநாள் போன்ற விழாக்களில் சிறு சிறு பரிசுகள் கொடுத்து அவர்களைத் திக்கு முக்காடச் செய்துவிடுவார். இப்படியிருப்பதற்குக் காரணமாக அவர் சொன்னது, நான் ஏழையாய், தனிமையில் இருந்தபோது இத்தகைய அன்புக்காக ஏங்கினேன். ஏழைகள் இத்தகைய அன்புக்காக ஏங்கியிருப்பார்கள் என எனவாழ்வு கற்றுக்கொடுத்துள்ளது என்றார். நீதிமானகளையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்று யேசுவின் பாணி இது. யேசு பாவிகளை அழைக்க வந்ததால் பரிசீலரை அழைக்கவில்லை. அவர்களும் பாவிகள் தானே! லேவியின் பாவம் வெளிப்படையாகத் தெரியாது. லேவி பாவி என்று தன்னிலே உணர்ந்தவர். ஆனால், பரிசேயர் தங்களது பாவத்தை மூடிமறைத்து, தாங்கள் நீதிமான்போல் முகமூடி அணிந்தவர்கள். எனவே, தான் லேவியிடம் சென்றால் லேவியிடம் ஏற்பட்ட மாற்றம் அருமையானது. நான் யேசுவின் தோழன் என்பதைப் பெருமையுடன் பிற லேவியருக்குக் காட்டவே இந்த விருந்து ஏற்பாடு செய்தான். இது மனந்திருந்தியவர் ஏற்பாடு செய்த கொண்டாட்டம். நோயுற்ற எம்மைத் தேடி வந்த யேசுவே! இத்தவ நாட்களில் நாங்கள் தன்னிலை உணர்நது உம் அருள் பெற இதயத்தைத் திறந்து வைக்க அருள்தாரும்.

காவலன

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# இலங்கை – இந்தியா இடையே சர்வாம்ச பொருளாதார உடன்படிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதானது இலங்கையில் முதலீடு செய்யத் திட்டமிட்டிருப்போரின் ஆர்வத்தைப் பாதிக்க மாட்டாதென முதலீட்டுச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக நிலையம் ஒன்றை சென்னையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய முதலீட்டுச் சபைத் தலைவர்,

இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இதுவிடயம் குறித்து எதுவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

இலங்கை இந்திய நாடுகளுக்கிடையிலான சர்வாம்ச பொருளாதாரப் பங்காளித்துவ உடன்படிக்கை அடுத்த மாதம் அளவில் கைச் சாத்திடப்படவுள்ளது. இது பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த உதவும். இதன் மூலம் இந்தியாவின் தனியார் விமான நிலையங்கள் கொழும்புக்கான சேவையை ஆரம்பிக்க முடியும்.

மேலும் இரு நாடுகளுக்கிடையிலான வாகனப் போக்குவரத்துக்கு வழிகோலும் விதத்தில் பாக்குநீரிணைக்கு மேலாகப் பாலம் ஒன்றை நிர்ணயிப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றது.

இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகளை 25 கோடி டொலர்களாலும், இலங்கைக்கான இந்தியாவின் ஏற்றுமதிகளை 100 கோடி டொலருக்குக் கூடுதலான நிதியினாலும் அதிகரித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ-60,8)

# கூட்டணி அரசு ஊடாக நாட்டிற்கு புத்துயிர்

## சரத் அமுனுகம உரை

(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டில் அமையவுள்ள கூட்டணி அரசாங்கத்தின் ஊடாக நாட்டின் அனைதது் துறைகளுக்கும் புத்துயிர் ஊட்டப்படுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்டத்துக்கான முன்னணி வேட்பாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து சரத் அமுனுகம மேலும் கூறுகையில்,

சமூகப் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்துவதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டணியின் முக்கிய அபிலாசையாகும்.

சர்வதேச சமூகத்தில் இலங்கையின் தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பும், கடமையும் மக்களையே சார்ந்ததாகும் எனக் குறிப்பிட்டார். (உ-60,8)

# புலிகளை தார்மீக ரீதியில் ஆதரிப்பதை தவிர்க்க முடியாது

## வை.கோ தெரிவிப்பு

(சென்னை)

ஈழத் தமிழர்களின் பிரதிநிதியாக இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தார்மீக ரீதியில் ஆதரிப்பது தவிர்க்க முடியாதது என்று மறுமலர்ச்சி தி.மு.க பொதுச்செயலர் வை.கோ தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு வை.கோ அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை தமிழர்களின் ஒட்டுமொத்த ஒரே பிரதிநிதியாக விடுதலைப்புலிகள் தான் இருக்கின்றனர். எனவே விடுதலைப் புலிகளை தார்மீக அடிப்படையில் ஆதரிப்பது தவிர்க்க முடியாதது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. சபை போன்றவை இந்த உண்மையை உணர்ந்து அங்கீகரித்துள்ளன. அதே போன்றுதான், நானும் ஈழத்தமிழர்கள் உரிய கௌரவத்துடன் வாழ அவர்களை ஆதரிக்கிறேன். ஈழத்தமிழர்களின் நலனுக்கு ஆதரவு தெரிவிப்பதை காங்கிரஸ் எதிர்க்காது என்று நினைக்கிறேன். அரசியலில் சில சோகங்கள் நடக்கத்தான் செய்யும். அத்தகைய சோக சம்பவங்களை மீறி பெரும்பாலானவர்களின் நலன் கருதி அரசியல் கட்சிகள் செயல்பட வேண்டும். எனவே என் அணுகுமுறையில் எந்த முரண்பாடும் இல்லை என்று வை.கோ மேலும் தெரிவித்தார். (ச)

# தேசிய விளையாட்டு விழா நேற்றுடன் நிறைவு பெற்றது

(கிளிநொச்சியில் இருந்து விஜிதரன்)

3வது தமிழ்த் தேசிய விளையாட்டுவிழா நேற்று முடிவுற்றது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வாக விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படையினரின் சாகஸ நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் மன்னார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வவுனியா அணியை வென்றது.

பின்னர் கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம், கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன் உட்பட பலர் அங்கு சிறப்புரை நிகழ்த்தினர்.

வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்கள் சான்றிதழ்கள் சிறப்புப் பரிசுகள் என்பவற்றை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

தமிழ்த் தேசிய விளையாட்டு விழாவில் வெற்றி பெற்றவர்களின் முதல் இரு இடங்கள் மற்றும் அணிகளின் விபரம் வருமாறு:

**பெண்கள்**

**கரபந்தாட்டம்**: முதலிடம் திருகோணமலை, இரண்டாம் இடம் மன்னார்.

**கபடி**: முதலாமிடம் மட்டக்களப்பு, இரண்டாம் இடம் வவுனியா.

**தாச்சி** : முதலாமிடம் யாழ்ப்பாணம், இரண்டாமிடம் முல்லைத்தீவு.

**வலைபந்தாட்டம்** : முதலாமிடம் யாழ்ப்பாணம், இரண்டாமிடம் மன்னார்.

சிறந்த வீரர்களாக தெரிவு செய்யப்பட்டோர், எஸ்.மொனிக்கா குமாரி (கரபந்தாட்டம்) திருகோணமலை, க.சுஜா (கபடி) மட்டக்களப்பு, மே.சுபாசினி (தாச்சி) யாழ்ப்பாணம், இ.நித்தியா (வலைபந்து) யாழ்ப்பாணம்.

**ஆண்கள்**

**கரபந்தாட்டம்** : முதலாமிடம் திருமலை, இரண்டாமிடம் யாழ்ப்பாணம்.

**தாச்சி** : முதலாமிடம் கிளிநொச்சி, இரண்டாமிடம் யாழ்ப்பாணம்.

**கபடி** : முதலாமிடம் வவுனியா, இரண்டாமிடம் யாழ்ப்பாணம்.

**உதைபந்தாட்டம்** : முதலாமிடம் மன்னார், இரண்டாமிடம் வவுனியா.

**கிரிக்கெற்** : முதலாமிடம் யாழ்ப்பாணம், இரண்டாமிடம் மட்டக்களப்பு.

சிறந்த வீரர்களாக கரபந்தாட்டம்; ரி.தபுகல திருமலை, தாச்சி; சந்திரசேகரன் வவுனியா, கபடி; ஜெயசீலன் கிளிநொச்சி, உதைபந்தாட்டம்; அன்ரன் டெவிசன் மன்னார்.

சிறந்த கோல் காப்பாளர் வசந்ததீபன் கிளிநொச்சி. துடுப்பாட்டம் தனஸ்காந்தன் யாழ்ப்பாணம் ஆட்டநாயகன் ஜனார்த்தனன் யாழ்ப்பாணம். (ச-68)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சத்திரச் சந்தியில் கடந்த 24-ந் திகதி இடம்பெற்ற லொறிவிபத்தில் காயமடைந்து மரணமான நபரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த இராமு. கந்தசாமி (வயது 60) என்பவரே மரணமானவர் என அவரது மனைவி அடையாளம் காட்டினார். இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் அவரது மனைவியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (ச-3)

## யாழ்.பல்கலை...

தோர் மேற்கொண்ட அராஜக அச்சுறுத்தலைக் கண்டிக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களைத் தாங்கியவாறு பல்கலைக்கழக சமூகத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தை நிறைவு செய்யும் வகையில் ஆசிரியர் சங்கத்தால் யாழ்.அரச அதிபர், யாழ்.பொலிஸ் நிலையம், யாழ். கண்காணிப்புக் குழுத் தலைவர், மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (இ-19)

## கட்சிச்...

செயற்பட்டு வருகிறேன்.

தமிழரசுக் கட்சியின் பெயரை மற்றவர்கள் எவரும் பாவிக்கக் கூடாது என்ற நோக்கத்திலேயே நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தேனே தவிர வேறு எந்த விதமான அடிப்படை நோக்கமும் இல்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதற்கு தடைசெய்ய நான் விரும்பவில்லை. ஆனால் வரும் காலத்தில் கட்சியின் அனுமதியின்றி இத்தகைய சம்பவங்கள் நடைபெறக் கூடாது என்பதற்காகவே நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தேன் என்று கூறினார். (ம)

# சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்படும்

(கிரியல்ல)

தேர்தற் காலப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடும் வாகனங்கள் மீது தீவிர சோதனைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

தேர்தல் வன்முறைகளுக்குப் பயன்படுத்துவதற்காக வாகனங்களில் மறைத்துக்கொண்டு செல்லப்படும் ஆயுதங்கள் மற்றும் கலகத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கண்டறியும் விதமாகவே இச் சோதனைகள் மேற்கொள்ளப்படும்.

இச்சோதனைகள் மேற்கொள்ளப்படும்போது, ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படுமாயின் கொண்டு செல்லப்படும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் கொண்டு செல்வோர் உடனடியாகக் கைது செய்யப்படுவர்.

இச்சோதனைகள் விசேட பொலிஸ் குழுவினால் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

## மருத்துவ முகாம்

(பொன்னாலை)

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவசக் கண்சிகிச்சை, பொது மருத்துவ முகாம் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை வைத்திய பரிசோதனைகளை நடத்தவுள்ளார். (ச-49)

## ஜனநாயக...

மொழி புறக்கணிக்கப்பட்டுவிடும் என்ற ஒரு தப்பெண்ணம் பரப்பப்பட்டுள்ளது. அது தவறானதாகும். இளைஞர்கள் ஆங்கிலத்தில் மட்டுமன்றி சர்வதேசமொழிகள் எவற்றையேனும் விரும்பிப் படிப்பதற்கு ஊக்கம் கொடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (த-6)

## தமிழ்ச்செல்வன்...

இதேவேளை கடந்த முதலாம் திகதி கண்காணிப்புக் குழுவின் தலைவராக பதவியேற்ற இவர் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மற்றும் படையதிகாரிகளைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புகள் பற்றி பேச்சுக்கள் நடத்தியதுடன் அரசு-புலிகளுக்கிடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-61,4)

## விவசாயி கொலை

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளத்தில் விவசாயிகளுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

வயலுக்கு நீர் பாய்ச்சுவது தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக சின்னக் குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெகதீசன் என்பவரே மண்வெட்டியால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு மரணமானவராவார்

இக் கொலை தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த இராஜப்பிரகாசம் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக சாவகச்சேரி ஆதரவாளர்களுடன் ஆலோசிக்கப்படவுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தலைமையில அவரது இல்லத்தில் நாளை காலை இவ் ஆலோசனை இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி 13வது நாடாளுமன்றப பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இதில் கூட்டமைப்புச் சார்பாக போட்டியிடும் ரவிராஜ் கட்சி ஆதரவாளர்களைத் திரட்டும விதமாகவும் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தல் தொடர்பாகவும் இதில் ஆலோசனை நடத்துவார். (உ-16)

## கண்டர்...

பட்ட ஏ-9வீதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த எஸ்.சுப்பிரமணியம் (வயது64), தெல்லிப்பழையைச் சேர்ந்த எஸ்.சதமோகன் (வயது24) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

கிளிநொச்சியில் உள்ள உறவினர் வீடொன்றில் இடம் பெற்ற மரணச் சடங்கில் கலந்து விட்டு புளியங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (இ-37)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01
01
1922



மறைவு
23
02
1999

அமரர் சின்னையா நல்லையா
(மே் வட்டாரம் மண்டைதீவு)
திதி: 28.02.2004
(அட்டமி பூர்வபட்சம்)

விழி ஓரம் ஓடுகின்ற கண்ணீர்
விதியென்று சொன்னாலும் நிற்கா!
விம்பத்தில் தெரிகின்ற காட்சி
விந்தை உலகில் விசித்திரமையா!
இனி எப்போ காண்போமென்று
சிந்தையில் ஒரு கணம் கொண்டால்
நொருங்குண்ட இதயமாய்...!
ஓ ஐயனே பெறுக சாந்தி!

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட